# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1963/28 - 2016 අප්‍රේල් මස 20 වැනි බදාදා - 2016.04.20

*1963/28 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 9/2005*

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம்**

*53 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அந்தோனி இம்மானுவல் அமரதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட வகுதிகளைச் சேர்ந்த சுற்றுலாப்பயணி ஹோட்டல் தொடர்பிலும் பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல்களுக்கு உரிமமளிப்பதற்கும் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றதான அத்தகைய வீதத்தில் இருத்தல் வேண்டும் என இக்கட்டளைமூலம் குறித்துரைக்கின்றேன்.*

ஜோன் அந்தோனி இம்மானுவல் அமரதுங்க,
சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும்
கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016, ஏப்பிறல் 19.

**அட்டவணை III**

| பதிவு செய்வதற்கும் உரிமமளிப்பதற்குமாக செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள் | | | |
|---|---|---|---|
| நிரல் I<br>வகுதி | | நிரல் II<br>பதிவுக் கட்டணம்<br>ரூபா சதம் | நிரல் III<br>உரிமமளித்தல்<br>ரூபா சதம் |
| (1) | 1 நட்சத்திர ஹோட்டல் | 5,000.00 | 2,000.00 |
| (2) | 2 நட்சத்திர ஹோட்டல் | 10,000.00 | 2,500.00 |
| (3) | 3 நட்சத்திர ஹோட்டல் | 15,000.00 | 5,000.00 |
| (4) | 4 நட்சத்திர ஹோட்டல் | 20,000.00 | 7,500.00 |
| (5) | 5 நட்சத்திர ஹோட்டல் | 25,000.00 | 10,000.00 |

5- 74/1

ச.வ.பீ. 9/2005

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம்**

இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் மதியுரையின் மீது, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 50 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 69 ஆம் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ஜோன் அந்தோனி இம்மானுவல் அமரதுங்க,
சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும்
கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016, ஏப்பிறல் 19.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2016 ஆம் ஆண்டின 1 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறை (சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் வகுப்பாக்கம்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2016, மே 20 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் ஒவ்வொருவரும், உல்லாசப் பயணி ஹோட்டல்களின் எல்லா வகுதிகள் தொடர்பிலும் 1 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறை (சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் குறைந்தபட்சக் கொள்ளளவும் வசதிகளும்) விதிகளில் குறித்துரைக்கப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் எல்லா வகுதிகளுக்குமாகப் பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் எல்லா நேரங்களிலும் இணங்கியொழுகுகின்றதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3. 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறை (சுற்றுலாப்பயணி ஹோட்டல்களைப் பதிவு செய்தலும் அவற்றுக்கு உரிமமளித்தலும்) ஒழுங்குவிதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட மற்றும் உரிமமளிக்கப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் நட்சத்திர ஹோட்டல் ஒன்றாக வகுப்பாக்கஞ் செய்யப்படுதல் வேண்டும்.

4. (1) அதிகாரசபையால் நியமிக்கப்படவேண்டிய ஏழு உறுப்பினர்களைக் கொண்ட வகுப்பாக்கற் குழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) குழுவின் ஒரு உறுப்பினர், அதிகாரசபை தோதானதெனக் கருதக்கூடியவாறான இலங்கையின் சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் கழகங்களுடனான கலந்தாலோசனையுடன் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, குழுவின் தவிசாளராக (இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர் தவிர்ந்த வேறு ஒருவரை) குழுவின் உறுப்பினர்களில் ஒருவராகப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(4) அதிகாரசபையானது, குழுவிற்கென செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(5) குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் முன்னதாக இறப்பு, பதவிவிலகல் அல்லது பதவி நீக்கம் மூலமாக பதவி வெற்றிடமானாலொழிய, நியமனத் திகதியிலிருந்து இரண்டு வருட காலப்பகுதியொன்றுக்கு பதவிவகித்தல் வேண்டும். காலங்கழிவதன் மூலம் பதவியை வெற்றிடமாக்குகின்ற குழு உறுப்பினர் எவரும் மீள் நியமனத்திற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(6) (அ) தொடர்ச்சியாக குழுவின் மூன்று கூட்டங்களில் சமுகமளிப்பதிலிருந்து ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதியின்கீழ் நிறைவேற்றுகின்ற மூன்று தொடர்ச்சியான பரிசோதனைகளில் பங்கெடுப்பதிலிருந்து,

தானாகவே சமுகமளிக்காத குழு உறுப்பினர் எவரும் குழு உறுப்பினர் ஒருவராக இருப்பதிலிருந்து இல்லாதொழிந்ததாதல் வேண்டும்.

(7) தனது பதவிக் காலத்தின் காலாவதிக்கு முன்னதாக உறுப்பினர் ஒருவராக இருப்பதிலிருந்து இல்லாதொழிகின்ற ஆளொருவரைத் தொடர்ந்துறுகின்ற குழு உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படும் ஆளெவரும் எவ்வுறுப்பினரைத் தொடர்ந்துறுகின்றாரோ அவ்வுறுப்பினர் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(8) குழுவின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு சுற்றுலாப்பயணத்துறை என்னும் விடயத்துக்குப்பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

(9) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, குழுவானது அதனது கூட்டங்களின் நடவடிக்கைமுறையையும், அத்தகைய கூட்டங்களின் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலையும் ஒழுங்குப்படுத்தலாம்.

(10) குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அதனது உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் உள்ளமையை அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளமையை மட்டும் காரணமாகக் கொண்டு செல்லுபடியற்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.

5. (1) செயலாளர் ஆனவர், குழுவின் தவிசாளரின் பணிப்பின் கீழ், குழுவின் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும்.

(2) குழுவின் கூட்டம் ஒன்றிற்கான கூட்டநடப்பெண், நான்கு உறுப்பினர்கள் ஆதல் வேண்டும்.

(3) குழுவின் தவிசாளர் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்துடன் குழுவின் தவிசாளர் ஏதேனும் கூட்டத்திற்கு வருதைதராதபோது கூட்டத்தில் சமுகமாயிருந்த குழுவின் உறுப்பினர்கள் 4 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவரைத் தவிர வேறு உறுப்பினர் எவரையும் தவிசாளராக அவர்களிடையேயிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.

(4) குழுவிற்கான ஏதேனும் குறிப்பீட்டின் விடயப்பொருளில் அக்கறையுடைய அல்லது அக்குறிப்பீட்டில் அக்ரையுள்ள திறத்தவரினால் அல்லது திறத்தவர் சார்பாக அவ்விடயத்திற்கான குறிப்பீட்டில் ஆலோசிக்கப்பட்டிருக்கின்ற குழுவின் உறுப்பினர் எவரும் குழுவின் எக்கூட்டமொன்றில் அக்குறிப்பீடு தீர்மானிக்கப்படவிருக்கின்றதோ அக்கூட்டத்தில் பங்குபற்றுதல் ஆகாது.

6. (1) பணிப்பாளர் தலைமையதிபதி அவ்ஹோட்டலுக்கு ஒதுக்கப்படவேண்டிய தோதான நட்சத்திர வகுதியைத் தீர்மானிப்பதற்கு குழுவிற்கு குறிப்பீடொன்றைப் பணித்துரைத்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் கீழ் குழுவிற்கு செய்யப்பட்ட குறிப்பீடு ஒவ்வொன்றும் அத்தகைய குறிப்பீட்டினது விடயப்பொருளின் முழுமையானதும் சுருக்கமானதுமான கூற்று எழுத்தில் இருத்தல் வேண்டும்.

(3) குறிப்பீடு ஒவ்வொன்றும் குழுவின் தவிசாளருக்கு முகவரியிடப்படுதல் வேண்டும். அவர் அதனை செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

7. (1) குழு அதற்குச் செய்யப்பட்ட குறிப்பீடு ஒவ்வொன்றினதும் சோதனைக்கெனவும் தீர்மானத்திற்கெனவும் திகதி, நேரம், மற்றும் இடம் ஒன்றை நிர்ணயித்தல் வேண்டுமென்பதுடன், குழுவிற்கும் அத்தகைய குறிப்பீட்டில் அக்கறையுள்ள திறத்தவருக்கும் செயலாளர் ஊடாக எழுத்தில் அதன் அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

(2) குழுவினால் தீர்மானிக்கப்படவேண்டிய குறிப்பீட்டின் மீதான முடிவு கூட்டமொன்றில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையான வாக்குகளினாலாதல் வேண்டுமென்பதுடன், வாக்குகளின் சமத்துவம் ஒன்று இருக்குமிடத்து விடயத்திற்கேற்ப குழுவின் தவிசாளர் அல்லது கூட்டத்திற்கு தலைமைவகிக்கின்ற உறுப்பினர் தமது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) செயலாளர் குழுவினால் தீர்மானிக்கப்படும் குறிப்பீடு ஒவ்வொன்று தொடர்பிலும் குழுவின் நடவடிக்கைமுறைகளின் பதிவேடு ஒன்றினைப் பேணுதல் வேண்டும்.

8. (1) குழுவானது பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சேர்க்கப்படுவதற்கு 7 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட குறிப்பீடு எதனினதும் மீதான அதனின் தீர்மானத்தின் அறிவித்தல் ஒன்றைச் சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, குழுவின் தீர்மானம் கிடைக்கப்பெற்றதன்மேல் சுற்றுலாப்பயணி ஹோட்டல் எது தொடர்பில் குறிப்பீட்டின் விடயப்பொருள் இருந்ததோ அது தொடர்பில் முடிவுக்கு ஒத்திசைவாக வகுப்பாக்கஞ் செய்தல் சான்றிதழொன்றை பதிவு செய்யப்பட்ட உரிமையாளருக்கு வழங்குதல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளின் முதலாம் அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வகுப்பின் பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒவ்வொன்றும் அதனது நிரல் II இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் எல்லைகளிடையேயான புள்ளிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

10. ஒன்று அல்லது இரண்டு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாகத் தரப்படுத்த விரும்புகின்ற பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் ஒவ்வொருவரும் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்படும் ஆகக்குறைந்த தேவைப்பாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11. மூன்று, நான்கு அல்லது ஐந்து நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாகத் தரப்படுத்த விரும்புகின்ற பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் ஒவ்வொருவரும் இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்படும் ஆகக்குறைந்த தேவைப்பாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும்.

12. (1) குறித்த வகையொன்றின் நட்சத்திர வகுப்பு சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாக தரப்படுத்த விரும்புகின்ற பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் ஒவ்வொருவரும் இதற்கான அட்டவணை IV இன் நிரல் II இன்நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்படும் வசதிகளுக்காக அதன் நிரல் III இல் குறித்துரைக்கப்படுகின்றவாறான அதேமுறையில் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி செய்யப்பட்ட நட்சத்திர வகுப்பு சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் தொடர்பிலான எல்லா வகுப்பாக்கங்களும் வேறு வகையாகத் தீர்மானிக்கப்பட்டாலொழிய மூன்று ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

(3) நட்சத்திர வகுப்பு ஹோட்டல் ஒன்று மூன்று ஆண்டு காலப்பகுதி ஒவ்வொன்றின் காலாவதியிலும் மீள வகுப்பாக்கஞ் செய்தல் வேண்டும்.

13. (1) குழுவிற்குச் செய்யப்பட்ட ஏதேனும் குறிப்பீடு தொடர்பில் முடிவொன்றை அடைகின்ற நோக்கத்திற்கென, சோதனையொன்று குழுவின் இரண்டு உறுப்பினர்களுக்குக் குறையாதோரால் கொண்டு நடாத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள்-

(அ) எச்சுற்றுலாப் பயணி ஹோட்டல் தொடர்பில் குறிப்பீடு குழுவிற்குச் செய்யப்பட்டிருக்கின்றதோ அச்சுற்றுலாப்பயணி ஹோட்டலுக்குள் நுழையலாம், சோதனை செய்யலாம் மற்றும் பரீட்சிக்கலாம் ; அத்துடன்

(ஆ) அதற்கான கிரயத்தைச் செலுத்துவதன் மேல் அத்தகைய சுற்றுலாப்பயணி ஹோட்டலினால் பரிமாற்றப்படும் ஏதேனும் உணவின் அல்லது குடிபானத்தின் மாதிரியை எடுக்கலாம்.

(2) சோதனை நடாத்துவதில் குழுவின் உறுப்பினர்களால் தேவைப்படுத்தக்கூடியவாறான எல்லா அத்தகைய வசதிகளையும் வழங்குவது பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் அல்லது ஹோட்டலின் பொறுப்பதிகாரியாக இருக்கின்ற ஆளின் கடமையாதல் வேண்டும்.

14. (1) சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்று தொடர்பில் வழங்கப்படுகின்ற வகுப்பாக்கற் சான்றிதழ் ஒன்று (2) ஆம் பந்தியின் கீழ் அத்தகைய நோக்கத்திற்கென குறிப்பீடு ஒன்றின் பெறுகையின் மீது குழுவினால் விடயத்திற்கேற்ப எந்நேரத்திலும் திருத்தப்படலாம் அல்லது மீளப்பெறப்படலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி தனது சொந்தப் பிரேரணையின் மீது அல்லது அதன்சார்பில் அவருக்குச் செய்யப்பட்ட பிரதிநிதித்துவத்தின் மீது வகுப்பாக்கற் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கின்ற ஏதேனும் சுற்றுலாப்பயணி விடுவிதியில் நுண்ணாய்வு ஒன்றைக் கொண்டு நடாத்தலாமென்பதுடன், அவர் அச்சான்றிதழானது ஒன்றில் திருத்தப்படுவதற்கு அல்லது மீளப்பெறப்படுவதற்குத் தேவைப்படுகின்றதென தீர்மானிக்குமிடத்து, குழுவின் தீர்மானத்திற்கென அதற்குக் குறிப்பீடொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

15. (1) நட்சத்திர வகுப்பு சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாக வகைப்படுத்தப்படும் சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்று பின்வருவனவற்றுக்கு உரித்துடையதாதல் வேண்டும் :-

(அ) அது ஐந்து நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாக வகைப்படுத்தப்படின் ஐந்து நட்த்திர சுற்றுலாப்பயணி ஹோட்டலின் பெயருடன் அதனைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட இலச்சினையைப் பயன்படுத்துதலும் வெளிக்காட்டிவைத்தலும் ;

(ஆ) அது நான்கு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாக வகைப்படுத்தப்படின் நான்கு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டலின் பெயருடன் அதனைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு தவிசாளரினால் அங்கீகரிக்கப்பட்ட இலச்சினையைப் பயன்படுத்துதலும் வெளிக்காட்டிவைத்தலும் ;

(இ) அது மூன்று நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாக வகைப்படுத்தப்படின் மூன்று நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டலின் பெயருடன் அதனைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட இலச்சினையைப் பயன்படுத்துதலும் வெளிக்காட்டி வைத்தலும் ;

(ஈ) அது இரண்டு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாக வகைப்படுத்தப்படின் இரண்டு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டலின் பெயருடன் அதனைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட இலச்சினையைப் பயன்படுத்துதலும் வெளிக்காட்டிவைத்தலும் ;

(உ) அது ஒரு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாக வகைப்படுத்தப்படின் ஒரு நட்சத்திர சுற்றுலாப்பயணி ஹோட்டலின் பெயருடன் அதனைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட இலச்சினையைப் பயன்படுத்துதலும் வெளிக்காட்டிவைத்தலும் ;

16. (1) அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் எழுத்திலான அதிகாரத்தின்கீழ் செயலாற்றுகின்ற அதிகார சபையின் ஏதேனும் உறுப்பினர் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றுகின்ற அதிகார சபையின் ஏதேனும் அலுவலர்–

(அ) முன்னதான அறிவித்தலுடன் அல்லது அறிவித்தல் இன்றி ஏதேனும் சுற்றுலாப்பயணி ஹோட்டலினுள் நுழையலாமென்பதுடன், அத்தகைய ஹோட்டல் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கப் பேணப்படுகின்றதா என்ற ஆயந்தறிகின்ற நோக்கத்திற்கென சோதிக்கலாம் ;

(ஆ) ஏதேனும் நேரத்தில் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரைப் பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றிற்குப் பொறுப்பான எவரேனும் ஆளை அத்தகைய ஆளின் அல்லது அவர் சார்பில் எவரேனும் வேறு ஆளின் உடைமையில், பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் புத்தகம், அறிவித்தல், பதிவேடு, நிரல் மற்றும் வேறு ஆவணத்தை சமர்ப்பிக்கும்படி தேவைப்படுத்தலாம் ;

(இ) அத்தகைய புத்தகம், அறிவித்தல், பதிவேடு, நிரல் அல்லது வேறு ஆவணத்தினைப் பரீட்சிக்கலாம், அத்தகைய புத்தகம், அறிவித்தல், பதிவேடு, நிரல் அல்லது ஆவணத்திலிருந்து பிரதிகளை எடுக்கலாம் அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை எடுக்கலாமென்பதுடன் அதிலுள்ள ஏதேனும் விடயத்தை விளக்குமாறு எவரேனுமாளைத் தேவைப்படுத்தலாமென்பதுடன், சட்டத்தின் கீழ் அல்லது ஒழுங்குவிதிகளின்கீழ் ஏதேனும் தவறொன்றின் புரிகையின் சான்றாக அவரது கருத்தில் பயன்படுத்தக்கூடியவாறான அத்தகைய புத்தகம், அறிவித்தல், பதிவேடு, நிரல் அல்லது ஆவணங்களைக் கைப்பற்றலாம் ;

(ஈ) அவரால் நுண்ணாய்வு செய்யப்படுகின்ற ஏதேனும் விடயத்துடன் தொடர்புபட்ட அவர் பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான ஒன்றில் வேறு எவரேனும் ஆளின் முன்னிலையில் அல்லது தனியாக, அத்தகைய பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டலின் வளவினுள் அவர் காண்கின்ற எவரேனும் ஆளை அல்லது அத்தகைய வளவுகளில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கின்றார் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை அவர் கொண்டுள்ள அல்லது தொழிலில் அமர்த்தப்பட்டிருக்கின்ற, அல்லது இப்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் விடயத்தினை உடைமையில், காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற எவரேனும் ஆளைக் கேட்கலாம்; அத்துடன்

(உ) அவரால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அவர் முன் தோன்றுவதற்கு (ஈ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யபட்ட எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாமென்பதுடன், அவரால் நுண்ணாய்வு செய்யப்படுகின்ற ஏதேனும் விடயத்தை அத்தகைய ஆளிடம் கேட்கலாம்.

(2) ஏதேனும் ஒழிப்பு அல்லது தடுப்பு இன்றி அத்தகைய நுண்ணாய்வை அல்லது சோதிப்பைக் கொண்டுநடாத்துவதற்கு (1) ஆம் பந்தியின் கீழான நுண்ணாய்வு அல்லது சோதனையை நடாத்துகின்ற ஆளொருவரினால் அல்லது ஆட்களினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறான எல்லா அத்தகைய வசதிகளையும் வழங்குதல் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் அல்லது பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டலிற்குப் பொறுப்பாக இருக்கின்ற எவரேனும் ஆளினதும் கடமையாதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின்கீழ் அவர் மீது அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற எவரேனும் ஆட்கள் கோரப்பட்டதன் மீது (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் தனது அடையாளத்தின் அல்லது எழுத்திலான அதிகாரத்தின் சான்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் கீழ் நுண்ணாய்வொன்றை அல்லது சோதனையொன்றைக் கொண்டுநடாத்துவதற்கு தத்துவமளிக்கப்பட்டிருக்கின்ற ஆளொருவரை அல்லது ஆட்களை எதிர்க்கின்ற அல்லது தடுக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

17. (1) வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட சுற்றலாப்பயணி ஹோட்டல் ஒன்று இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அவ்வாறு செய்வதற்கு உரித்துடையாதாக்கப்பட்டிருந்தால் மற்றும் அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலொழிய, அது 15 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் இலச்சினையைப் பயன்படுத்துதலோ வெளிக்காட்டிவைத்தலோ ஆகாது.

(2) வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்று 15 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக ஏதேனும் மோசடியான இலச்சினை அல்லது அத்தகைய இலச்சினையின் போலி ஒன்றைப் பயன்படுத்துதலோ அல்லது வெளிக்காட்டிவைத்தலோ அல்லது பயன்படுத்தப்பட அல்லது வெளிக்காட்டிவைக்கப்படச் செய்வித்தலோ ஆகாது.

(3) வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்று "வகுப்பாக்கஞ் செய்யப்படும் சுற்றுலாப்பயணி ஹோட்டல்" என்னும் சொற்களை அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட நட்சத்திர வகுப்பு அல்லது இலச்சினையை வெளிக்காட்டுவதல்லாத "நட்சத்திர வகுப்பு சுற்றுலாப்பயணி ஹோட்டல்" என்னும் சொற்களை உள்ளடக்குகின்ற பெயர் ஒன்றைப் பாவித்தலோ வெளிக்காட்டிவைத்தலோ ஆகாது.

(4) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வகுப்பாக்கம் செய்யப்படாத ஏதேனும் சுற்றுலாப் பயணி ஹோட்டல் "நட்சத்திர வகுப்பு ஹோட்டல்" அல்லது அப்பயன்பட வேறுபடுத்தும் சோற்களை பயன்படுத்துதலோ அல்லது வெளிகாட்டி வைத்தலோ அல்லது பயன்படுத்தபட அல்லது வெளிக்காட்டிவைக்கப்பட வைத்தலோ ஆகாது.

(5) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்கு வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட ஹோட்டல் ஒன்று, அத்தகைய இலச்சினை ஏதேனும் அறிவித்தல், காகிதாதி, சீருடை, கருவி, ஆவணம் அல்லது அத்தகைய ஹோட்டலில் அல்லது ஹோட்டலினால் எத்தன்மைத்தான பெயரினால் அழைக்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் வேறு ஏதேனும் சாதனத்தில் அல்லது அவற்றின் மீது தோன்றுமாயின் 15 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் இலச்சினையைப் பயன்படுத்துவதாகக் கருதப்படும்.

18. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் கட்டளை, அறிவித்தல், தீர்மானம் ஒன்றினால் இன்னலுறும் எவரேனுமாள், விடயத்துக்கேற்ப, அத்தகைய கட்டளை, அறிவித்தல் அல்லது தீர்மானம் வழங்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் 1982, யூலை 27 ஆந் திகதிய 296/6 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1982 ஆம் ஆண்டின் மேன்முறையீட்டு நியாய சபைகள் ஒழுங்குவிதிகளினால் தாபிக்கப்பட்ட நியாய சபைகளுக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

19. இவ்வொழுங்குவிதிகளினால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் தனது கடமைகளைத் தொடங்குவதற்கு முன்னர் தனது கடமைகளைப் புரிகையில் தனது அறிவுக்கெட்டக்கூடிய ஏதேனும் நிகழ்வு, கருமம் அல்லது பொருள் பற்றிய கடுமையான இரகசியத்தன்மையைப் பேணுவதற்கு தான் உறுதியளிக்கின்ற பிரகடனம் ஒன்றைக் கையெழுத்திடுதல் வேண்டும்.

20. (1) இவ்வொழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாடுகளை மீறுகையில் செயற்படுகின்ற ஆளெவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எவரேனுமாளினால் மீறப்பட்டிருக்கின்றதென கிடைக்கப்பெறும் சான்றுகளின் மீது விசாரணையின் பின்னர் திருப்திப்படுகின்றவிடத்து, அவர் பின்வருவனவற்றுள் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதையோ செய்யலாம் :-

(அ) எழுத்தில் அத்தகைய ஆளை எச்சரிக்கலாம் ; அல்லது

(ஆ) அவ்வாள் சான்றிதழ் அல்லது உரிமமொன்றை வைத்திருப்பவராக இருக்கின்றவிடத்து வழங்கப்பட்டிருக்கின்ற சான்றிதழ் அல்லது உரிமத்தினை விடயத்துக்கேற்ப மீளப்பெறலாம். இடைநிறுத்தலாம் அல்லது உரிமத்தை மீளப் புதுப்பிப்பதற்கு மறுக்கலாம்.

(3) ஏதேனும் தவறு இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அளிக்கப்பட்ட உரிமத்தை வைத்திருப்பவராகவுள்ள பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் ஒருவரின் எவரேனும் சேவையாளரினால் அல்லது முகவரினால் புரியப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய உரிமையாளரால் அத்தகைய தவறானது தனது அறிவிற்கு அப்பாற்பட்டு புரியப்பட்டுள்ளதென அல்லது அவர் அத்தகயை தவறின் புரிகையைத் தடுப்பதற்கு குறிப்பான கவனத்தைப் பிரயோகித்திருக்கின்றாரென தாபித்தாலொழிய பதிவு செய்யப்பட்ட உரிமையாளரினால் புரியப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

21. (1) 1999, மாச்சு 11 ஆந் திகதிய 1070/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1999 ஆம் ஆண்டின் சுற்றுலாப்பயணி ஹோட்டல் கோவை இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

(2) ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளின் இல்லாதொழித்தல் எது எவ்வாறிருப்பினும் இவ்வொழுங்குவிதிகளை நடைமுறைக்கு வருவதற்கு உடன்முன்னராக அவ்வொழுங்குவிதிகளின் கீழ் அளிக்கப்பட்ட வகுப்பாக்கற்சான்றிதழ் ஒன்று வலிதாதலும் பயனுறுவதாதலும் வேண்டுமென்பதுடன் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் செய்யப்பட்ட பதிவொன்றாக, வழங்கப்பட்ட உரிமமொன்றாக மற்றும் அளிக்கப்பட்ட வகுப்பாக்கம் ஒன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய சுற்றுலாப்பயணி ஹோட்டல் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

22. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி,-

"சட்டம்" என்பது, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டம் எனப் பொருள்படும் ;

"அதிகாரசபை" என்பது, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தினால் தாபித்து உருவாக்கப்பட்ட இலங்கை சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபை எனப் பொருள்படும் ;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும் ; அத்துடன்

"சுற்றுலாப்பயணி ஹோட்டல்" என்பது, உணவுடன் அல்லது உணவின்றியதான உறங்கல் இருப்பிடமானது கட்டணத்திற்காக அல்லது வெகுமதிக்காக சுற்றுலாப்பயணிகளுக்கு வழங்குவதற்கென ஏற்பாடு செய்கின்ற அல்லது வைத்திருக்கின்றதும் அத்துடன் பத்து படுக்கையறைகளுக்குக் குறையாதுள்ளதுமான தாபனம் அல்லது இடம் ஒன்றெனப் பொருள்படும்.

**அட்டவணை I**

(ஒழுங்குவிதி 9)

| சுற்றுலாப்பயணிகள் ஹோட்டல்களை வகுப்பாக்கஞ் செய்தல் | ஆகக் குறைந்த புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|
| நிரல் I | நிரல் II | நிரல் III |
| (அ) 5 நட்சத்திர ஹோட்டல் | 4,000 | 5,000 |
| (ஆ) 4 நட்சத்திர ஹோட்டல் | 3,500 | 5,000 |
| (இ) 3 நட்சத்திர ஹோட்டல் | 3,000 | 5,000 |
| (ஈ) 2 நட்சத்திர ஹோட்டல் | 2,500 | 5,000 |
| (உ) 1 நட்சத்திர ஹோட்டல் | 2,000 | 5,000 |

**அட்டவணை II**

(ஒழுங்குவிதி 10)

| 1 மற்றும் 2 நட்சத்திர வகுப்பு சுற்றுலாப்பயணிகள் ஹோட்டல்களுக்கான கட்டாய தேவைப்பாடுகள் | | |
|---|---|---|
| | நிரல் I<br>விடயம் | நிரல் II<br>வசதிகள் |
| 1. | படுக்கை அறைகள் | மத்தியிலமைக்கப்பட்ட பாதுகாப்புப் பெட்டக வசதிகள் அல்லது தனிப்பட்ட பாதுகாப்பு வசதிகள் கிடைக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும் |
| 2. | சிற்றுண்டிச்சாலைகளும் மதுபானச்சாலைகளும் | மதுபானச் சாலைகளில் ஓடுகின்ற சுடுநீர் மற்றும் குளிர்நீர் கலந்துவரும் குழாய்களுடன் பொருத்தமான கண்ணாடிக் குவளைகள் கழுவும் வசதிகள் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும் |
| 3. | சமையலறை | பாத்திரங்கள் கழுவும் பொருட்டு பாத்திரம் கழுவும் இயந்திரங்கள் இல்லாதவிடத்து ஓடுகின்ற சுடுநீர் மற்றும் குளிர்நீர் கலப்புக் குழாய்களுடன்கூடிய மூன்று கழுவு தொட்டிகள் (சிங்குகள்) கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும் |

**அட்டவணை III**

(ஒழுங்குவிதி 11)

| 3, 4 மற்றும் 5 நட்சத்திர வகுப்பு சுற்றுலாப்பயணிகள் ஹோட்டல்களுக்கான கட்டாய தேவைப்பாடுகள் | | |
|---|---|---|
| | நிரல் I<br>விடயம் | நிரல் II<br>வசதிகள் |
| | ஹோட்டல் கட்டடம் | 1. 5 நட்சத்திர ஹோட்டல்கள் 3 அறைத்தொகுதிகள் உட்பட 3 அறைத்தொகுதிகள் உட்பட ஆகக் குறைந்தது 30 அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அறைத் தொகுதியின் ஆகக் குறைந்த பரப்பளவு 65 சதுர மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறைத் தொகுதியிலும் இணைந்த குளியலறையுடன்கூடிய ஒரு படுக்கையறை, வரவேற்பறை, சரக்கறையுடன்கூடிய உணவுக்கூடம் இருத்தல் வேண்டும் |
| | | 2. 4 நட்சத்திர ஹோட்டல்கள் 2 அறைத்தொகுதிகள் உட்பட ஆகக்குறைந்தது 30 அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அறைத் தொகுதியின் ஆகக்குறைந்த பரப்பளவு 45 சதுர மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறைத் தொகுதியிலும் இணைந்த குளியலைறையுடன் கூடிய ஒரு படுக்கையறை, வர வேற்பறை மற்றும் சரக்கறையுடன் கூடிய உணவுக்கூடம் இருத்தல் வேண்டும் |
| | | 3. 3 நட்சத்திரக் ஹோட்டல்கள் 1 அறைத்தொகுதி உட்பட ஆகக் குறைந்தது 30 அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அறைத் தொகுதியின் ஆகக்குறைந்த பரப்பளவு 45 சதுர மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறைத் தொகுதியிலும் இணைந்த குளியலறையுடன்கூடிய ஒரு படுக்கையறை, வரவேற்பறை மற்றும் வரவேற்பறை, உணவுக்கூடம் இருத்தல் வேண்டும். |

அட்டவணை III (தொடர்ச்சி)

| 3, 4 மற்றும் 5 நட்சத்திர வகுப்பு சுற்றுலாப்பயணிகள் ஹோட்டல்களுக்கான கட்டாய தேவைப்பாடுகள் | | |
|---|---|---|
| | நிரல் I<br>விடயம் | நிரல் II<br>வசதிகள் |
| 2. | பிரதான சேவைகள் | 1. பிரதான மின்வழங்கலில் தடை ஏற்படும்போது 100 வீதம் சக்தி வழங்கக்கூடிய மின் பிறப்பாக்கி (ஜெனரேட்டர்) கிடைக்கக்கூடியதாக இருத்தல்.<br>2. தரைத்தளம் உள்ளடங்கலாக மூன்று தளங்களுக்கு மேலான கட்டடங்களையுடைய ஹோட்டல்கள்/கட்டடங்களில் போதுமான சேவை உயர்த்திகள் இருத்தல் வேண்டும். |
| 3. | படுக்கையறைகள் | 1. பிரதான கதவுப்பூட்டு ஒரு முதன்மைச் சாவி/ அட்டை முறைமையிலிருத்தல் வேண்டும். அத்துடன் உட்பக்கமிருந்து இரட்டைப்பூட்டு வசதி கொண்டிருத்தல் வேண்டும். இது அவசரகால முதன்மை சாவி/ அட்டையினால் மட்டுமே வெளியிலிருந்து திறக்க முடியும்.<br>2. ஒவ்வொரு படுக்கையறையிலும் போதிய அளவிலான சாவியற்ற பாதுகாப்புப் பெட்டகம் வழங்கப்படுதல் வேண்டும். |
| 4. | சிற்றுண்டிச்சாலைகளும் மதுபானச் சாலைகளும் | 1. குளிரூட்டல் அல்லது வெப்பமேற்றல் வசதியுடன் கூடிய வசதியான நிலைமைகளைப் பேணும் மேலதிக மதுபானச்சாலை கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.<br>2. மதுபானச்சாலையில் கண்ணாடிக் குவளைகள் கழுவும் இயந்திரம் ஒன்று கிடைக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும்.<br>3. மதுபானச்சாலையில் தொற்றுநீக்கிய குடிநீர் வழங்களுடன் இணைக்கப்பட்ட ஐஸ்கட்டி தயாரிக்கும இயந்திரம் ஒன்று கிடைக்கக்கூடிதாயிருத்தல் வேண்டும்.<br>4. பல்வேறு வகை உணவுகள், குடிபானங்களைக் கொண்ட அறைச் சேவை வசதிகள் கிடைக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும்.<br>5. ஐந்து மற்றும் நான்கு நட்சத்திர ஹோட்டல்சளில் 24 மணி நேரமும் இயங்கும் காபிக்கடை அல்லது உள் அறையிலேயே உணவருந்தும் வசதி இருத்தல் வேண்டும். |
| 5. | சமையலறை | 1. சமையலறைத் தரை எளிதில் துப்பரவு செய்யக்கூடிய வகையில் உகந்த ஊடுருவாத பொருள்களால் ஆக்கப்பட்டதாயும் வழுக்காததாயும் இருத்தல் வேண்டும்.<br>2. அனைத்து வகையான சமையலுபகரணங்கள், கண்ணாடிப் பாண்டங்களுக்கான முன்கழுவு தொட்டி மற்றும் பாத்திரம் கழுவும் தொட்டி இருத்தல் வேண்டும்.<br>3. கண்ணாடி பாண்டம் கழுவுவதற்கு தனியான ஒரு கழுவு இயந்திரம் இருத்தல் வேண்டும்.<br>4. சூடான காற்று மற்றும் மணங்களைப் பயனுறுதியுடன் வெளியேற்றும் பொருட்டு கிறீஸ் வடிகட்டியுடன் கூடிய வெளியேற்று கூரை ஒன்று அனைத்து சமையலு பகரணங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.<br>5. பானை கழுவியானது சுடுநீர் தண்ணீர் கலந்துவரும் குழாயுடன் கறைபடா உருக்கு தொட்டியொன்றைக் கொண்டிருக்கும். |

**அட்டவணை** III *(தொடர்ச்சி)*

| 3, 4 மற்றும் 5 நட்சத்திர வகுப்பு சுற்றுலாப்பயணிகள் ஹோட்டல்களுக்கான கட்டாய தேவைப்பாடுகள் | | |
|---|---|---|
| | நிரல் I<br>விடயம் | நிரல் II<br>வசதிகள் |
| 6. | களஞ்சியம் | உத்தேச சேமிப்புக் காலத்துக்கு ஏற்ற வெப்ப நிலையில் இறைச்சி, கடலுணவு, பதனிடப்பட்ட உணவுப் பண்ணைப் பொருட்கள் ஆகியவை தனித்தனியாகக் களஞ்சியப் படுத்தப்படல் வேண்டும். |
| 7. | சுகாதார தேவைகள் | ஈர கழிவுப்பொருள் வெப்பக்கட்டுப்பாடான எளிதில் துப்புரவு செய்யக்கூடிய உகந்த இடத்தில் அகற்றப்படும் வரை களஞ்சியப்படுத்தல் வேண்டும்.<br><br>சமையலறைக் கழிவுநீர் கிறீசிடப்பட்ட குழாய் ஒன்றுக்கு நேரடியாக அனுப்பப்படும். அங்கு சேர்ந்திருக்கும் கிறீஸ் நீக்கப்பட்டு ஒழுங்காக அகற்றப்படும். |
| 8. | சாரதிகளுக்கான வசதிகள் | சாரதிகளின் பயன்பாடு பொருட்டு தனிப்பட்ட போதுமான கழிவறை வசதிகள் கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும். |
| 9. | பணியாட்டொகுதியினர் | ஆங்கிலம் தவிர்ந்த அந்நிய மொழிகள் பேச்சூடிய இருவர் அல்லது மேற்பட்ட பணியாட்டொகுதியினர் இருக்க வேண்டும். அதிதிகள் தொடர்பு அலுவலர் அடங்கலாக முன் அலுவலக பணியாட்டொகுதியினர் நல்ல ஆங்கில மொழியறிவு உடையவ ராயிருத்தல் வேண்டும். |

**அட்டவணை** IV

(ஒழுங்குவிதி 12)

| சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள் | | | | |
|---|---|---|---|---|
| இல. | நிரல் I<br>பரப்பளவு | | நிரல் II<br>வசதிகள் | நிரல் III<br>புள்ளிகள் |
| 1. | அமைவிடம் | 1. | அணுகுகை நுழைவாயில், சுற்றுப்புறம் மற்றும் சூழல் ஆடம்பர ஹோட்டலுக்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். | 75 |
| | | 2. | ஒவ்வொரு ஹெக்டேயரிலும் உள்ள விருந்தினர் அறைகளும், தளங்களின் எண்ணிக்கையும் ஹோட்டலின் நோக்கத்திற்கு அமைவாகவிருத்தல் வேண்டும். அடர்த்தி கூடிய பிரதேசங்களில் ஒரு ஹெக்டேயருக்கு 120 அறைகளும், நடுத்தர அடர்த்தி பிரதேசங்களில் ஹெக்டெயருக்கு 60 அறைகளும், அடர்த்தி குறைந்த பிரதேசங்களில் 24 அறைகளும் இருத்தல் வேண்டும். | 50 |
| | | 3. | தரைத்தோற்றமும் பசுமைப் பிரதேசமும் இடத்தின் பொதுவான அழகுக்கு மெருகூட்டுவதாக இருத்தல் வேண்டும். | 50 |
| | | 4. | போதுமான அளவில் நல்ல தளபாடங்களுடன்கூடிய ஹோட்டலின் நோக்கத்திற்கிணங்க விருந்தினரின் இளைப்பாறுகைக் காக குறித்தொதுக்கப்பட்ட செயற்பாட்டுப் பூங்கா/மேற்தள இடப்பரப்பு தவிர வேறு போதுமான இடப்பரப்புகளும் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 5. | அமைவிடத்தில் விரும்பத்தக்க பின்னணி ஒலி மட்டம் பகலில் 50d BA க்குக் குறைவாகவும் இரவில் 45d BA க்குக் குறைவாகவும் இருத்தல் வேண்டும். | 25 |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

*சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள்*

| இல. | நிரல் I<br>பரப்பளவு | | நிரல் II<br>வசதிகள் | நிரல் III<br>புள்ளிகள் |
|---|---|---|---|---|
| | | 6. | ஹோட்டலின் தரைத்தோற்றத்துடன் இணைந்தவாறு போதுமான நன்கு தரையிடப்பட்ட மற்றும் ஒளியூட்டப்பட்ட கார் நிறுத்துமிடங்கள் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 7. | பணியாள் மூலம் கார் நிறுத்தும் வசதி மற்றும் சாரதிகள் ஓட்டும் கார்களுக்கு திறமையான அழைப்புமுறைமையும் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். | 25 |
| 2. | ஹோட்டல் கட்டடம் | 1. | கட்டட வடிவமைப்பு, கட்டடக்கலைசார் அம்சங்கள் மற்றும் நிர்மாணம் என்பவை அயணமண்டல நாடுகளிலுள்ள சொகுசு ஹோட்டல் ஒன்றின் தனித்துவமான தன்மையை வெளிப்படுத்துதல் வேண்டும். | 50 |
| | | 2. | சுற்றாடல் மற்றும் அமைவிடத்துக்குப் பொருத்தமான வகையில் இலங்கையின் கட்டடக்கலை இயல்பை வெளிப்படுத்துவதில் விசேட கவனம் எடுக்கப்பட வேண்டும். | 25 |
| | | 3. | பிரதான வாயில் சொகுசு ஹோட்டல் ஒன்றுக்கு உகந்ததாய் இருத்தல் வேண்டும். | 25 |
| 3. | பொதுவான இடப்பரப்பு | 1. | ஹோட்டலின் கருதுகோளுக்கு அமைவாக கருமபீடம் சமமான வசதியுடன் முறையான வரவேற்பு, இணைந்த அல்லது தனியான பாதுகாவலர் மற்றும் கணக்கு பணியாளரைக் கொண்டிருக்க வேண்டும். வரவேற்பு பீடம் போதுமான பணியாட்டொகுதியினரைக் கொண்டிருத்தல் வேண்டும். பணியாட்டொகுதியினர் விருந்தினருக்கு உதவி செய்வதற்கு அவர்களது விசாரணைகளுக்குப் பதிலளிப்பதற்கும் நன்கு பயிற்றப் பட்டவராய் இருத்தல் வேண்டும். வரவேற்பு பகுதியில் நாணயமாற்று வீதங்கள் அனைத்தும் தெளிவாகக் காட்டப்பட்டிருக்க வேண்டும். விரைவில் வெளியேறக்கூடிய வகையில் கட்டணப்பட்டியல்கள் விரைவாகவும் திறமையாகவும் செயல்முறைப்படுத்தப்பட வேண்டும். | 50 |
| | | 2. | பயன்பாட்டாளர்களின் வசதி பொருட்டு பொது இடம் வளி சீராக்கிகள் பொருத்தப்பட்டு அல்லதுகாற்றோட்ட வசதியுடையதாய் இருக்கலாம். வளிச்சீராக்கிகள் பயன்படுத்தப்படுமிடத்து வெப்பநிலை (சர்வதேச நியமங்களின்படி) உகந்த மட்டங்களில் சீராக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும். எந்த ஒரு மாதத்தில் சராசரி வெப்பநிலை 20 $^{0}$Cக்கு கீழே இருக்கும் ஏதாவது தாபனத்தில் அறை வெப்ப நிலையை வசதியான மட்டத்தில் பேணுவதற்கு இயலுமான வெப்ப சீர்நிலைக் கருவிக் கட்டுப்பாட்டுடன் கூடிய வெப்பமேற்று முறைமை ஒன்று பொது அறைகளில் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். | 50 |
| 4. | கூடம் | 1. | ஹோட்டலின் அமைவிடம், சூழல் தொடர்பில் உருவையும் சுற்றுப்புறத் தோற்றத்தையும் வெளிப்படுத்துவதாக கூடம் இருத்தல் வேண்டும். அது நன்கு அமைக்கப்பட்டும், காற்று சீராக்கியுடன், மத்திய வெப்பமுடன் கூடிய அல்லது நன்கு காற்றோட்டமாக இருக்க வேண்டியதுடன் ஹோட்டலின் அளவுக்கு அமைவாக வசதியான இருக்கைகளைக் கொண்டதாயிருத்தல் வேண்டும். தளபாடங்கள், பொருத்திகள், முடிவு நிலைகள், அலங்கரிப்புகள் மற்றும் முகப்புக்கூடத்தில் காணப்படும் அலங்காரங்கள் அனைத்தும் உயர் தரம் வாய்ந்ததாய் இருத்தல் வேண்டும். | 150 |

அட்டவணை IV (தொடர்ச்சி)

| சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள் | | | |
|---|---|---|---|
| இல. | நிரல் I பரப்பளவு | நிரல் II வசதிகள் | நிரல் III புள்ளிகள் |
| | | 2. ஹோட்டலின் முகப்பு கூடம் விசேடமான ஓரிடத்திற்கு வந்தடைந்த உணர்வை வெளிப்படுத்துவதாய் சொகுசு ஹோட்டல் ஒன்றில் இருத்தல் வேண்டும். | 50 |
| | | 3. உகந்த மட்டத்திலான பொது ஒளியூட்டல் வசதியுடன் நேரடி மற்றும் மறை ஒளியூட்டல் இணைப்பினை முகப்பு கூடம் கொண்டிருத்தல் வேண்டும். வாசித்தல் மற்றும் எழுதுதலுக்கான செயற்பாட்டு அடிப்படையிலான ஒளியூட்டல் கூட்டத்தின் இடப்பரப்பில் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட வேண்டும். | 25 |
| | | 4. போதுமான தனிப்பட்ட வசதியை வழங்குகின்ற முகப்புக் கூடத்தின் ஆகக்குறைந்தது ஒரு மூடப்பட்ட பிரதேசம் அடங்கலாக பொது இடத்தில் போதிய தொலைபேசி வசதி இருத்தல் வேண்டும். | 25 |
| | | 5. விருந்தினர் நடைக்கூடங்கள் போதிய அளவு விரிவானதாக காற்றோட்டமுள்ளதாக மற்றும் போதிய ஒளியூட்டப்பட்டதாக இருக்க வேண்டியதுடன் ஹோட்டல் நியமங்களுக்கு அமைவுறுபவையாய் இருத்தல் வேண்டும். | 25 |
| | விருந்தினர் சேவைகள் | 6. சொகுசு ஹோட்டலுக்குப் பொருத்தமான விருந்தினர்களுக்குப் பின்வரும் சேவைகள் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். தபால் சேவை, மின்னஞ்சல், தொலைநகல் சேவை, விடப்பட்ட பொதிகள் சேவை, பதிவேட்டுடன் கூடிய காணாமல் போன மற்றும் கண்டெடுத்த விடயங்களின் பாதுகாப்பு ஏற்பாடு, வெளிநாட்டு நாணய மாற்றல் சேவை, பிரதான கடனட்டை ஏற்பு சேவை, பயண சேவை, டக்சி மற்றும் வாடகைக்கார் சேவை, நூல்கள், பத்திரிகைகள், தபாலட்டைகள், முத்திரைகள், எழுதுகருவிகள், சுருட்டு, புகைப்பட உபகரணங்கள், சில்லறை விடயங்கள் மருத்துவர்களால் குறிக்கப்படாத மருந்து வகைகளின் விற்பனைக்கான கடைகள். | 75 |
| 5. | படுக்கை அறைகள் | 1. தனிப்படுக்கை அறையொன்றின் அளவு ஆகக்குறைந்தது 1.07 மீற்றர் x 2 மீற்றர் ஆகவும் இரட்டைப் படுக்கை அறை ஒன்று ஆகக்குறைந்தது 1.83 மீற்றர் x 2 மீற்றர் ஆகவும் இருத்தல் வேண்டும். சொகுசு ஹோட்டல் ஒன்றுக்கு மெத்தைகள் சொகுசானதாகவும் அமைவான உயர்தரம் வாய்ந்ததாகவும் இருத்தல் வேண்டும். மெத்தையின் கனம் ஆகக்குறைந்தது 150 மி.மீ. ஆக இருத்தல் வேண்டும். | 60 |
| | | 2. அனைத்து விருந்தினர் அறைகளிலும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சௌகரியமான வெப்பநிலை மட்டம் பேணப்பட வேண்டும். வளிச்சீராக்கி பொருத்தப்பட்ட படுக்கை அறைகளில் மாறக்கூடிய வேகத்தில் வளிச் சுற்றோட்ட ஒழுங்கும் வெப்பநிலையை $24^oC \pm 4^oC$ க்கிடையே சீர்செய்யக்கூடிய வெப்பச் சீர்நிலைக் கருவிக் கட்டுப்பாடும் இருத்தல் வேண்டும். போதிய அளவு இயற்கை காற்று அறையினுள் வரக்கூடியதாய் இருத்தல் வேண்டும். ஏதாவது ஒரு மாதத்தில் சராசரி வெப்பநிலை $20^oC$ க்குக் குறைவாக இருக்கும்போது | |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

| சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள் | | | |
|---|---|---|---|
| இல. | நிரல் I<br>பரப்பளவு | நிரல் II<br>வசதிகள் | நிரல் III<br>புள்ளிகள் |
| | | அறை வெப்பநிலையை 20°C வரை சீராக்கக்கூடிய வெப்பசீராக்கி கருவிக் கட்டுப்பாட்டு சூடேற்றும் முறைமை ஒன்று இருத்தல் வேண்டும். ASHRAE வழிகாட்டு நெறிகளைப் பார்க்க. | |
| | | 3. ஆடம்பர ஹோட்டல்களுக்குப் பொருத்தமான பின்வரும் விடயங்கள் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும் :- (1) காபி மேசையுடன்கூடிய 2 சாய்மனைக் கதிரைகள் ; (2) முகம் பார்க்கும் கண்ணாடி ஸ்ரூல்/கதிரையுடன் கூடிய ஒப்பனை மேசை ; (3) எழுதும் மேசையும் கதிரையும் ; (4) சர்வதேச நிகழ்ச்சிகள் VCD, DVD, CD பிளேயர் கொண்ட தொலைக்காட்சிப் பெட்டி ; (5) ரேடியோ அல்லது சங்கீத முறைமை தொலைக்காட்சியுடானது விரும்பத்தக்கது ; (6) அறையினுள் சர்வதேச நேரடி அழைப்பு வசதி கொண்ட தொலைபேசி ; (7) சேவை விபரக்கொத்து அறைச்சேவை உணவுப் பட்டியல் சிறு மதுபானச் சாலைக் கட்டணம் ; (8) போதுமான எழுதுகருவிகள் உண்ணாட்டு வெளிநாட்டு கடித உறைகளும் பேனையும் ; (9) போதுமான தட்டுக்கள் மற்றும் கொளுக்கிகளுடன்கூடிய அலுமாரிகள் அல்லது சுவர் அலுமாரிகள் ; (10) கணினிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப கருவிகளை இணைக்கக்கூடிய வசதிகள் ; (11) பொருத்தமான கண்ணாடிப் பாண்டங்களைக் கொண்ட நன்கு நிரம்பப்பெற்ற அமைதியான சிறிய மதுபானச்சாலை ; (12) வேண்டப்படும்போது வழங்குவதற்கு சிறு கட்டில் ; (13) நுளம்புகளிலிருந்து பாதுகாப்பு அல்லது நுளம்புவலை. | 125 |
| | | 4. தரை, சுவர் மற்றும் சீலிங் அதி உயர் தரத்தில் செப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். | 75 |
| | | 5. ஒவ்வொரு படுக்கை அறையிலும் பின்வரும் மின் ஒளியூட்டல் இருத்தல் வேண்டும் :- (1) வாயிற் கதவுக்கு அருகே அமைந்துள்ள ஒரு முதன்மை ஆளியால் கட்டுப்படுத்தப்பட்ட பொதுவான அறை ஒளியூட்டல் ; (2) தனிப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக ஒவ்வொரு ஒளியூட்டலும் படுக்கையருகே இருந்து கட்டுப்படுத்தக்கூடிய வசதி கொண்டிருத்தல் வேண்டும் ; (3) சாய்மனைக் கதிரை அல்லது கட்டிலிலிருந்து வாசிக்கும்பொருட்டு போதுமான ஒளியைத் தக்கவாறு அமைத்துக்கொள்ளக்கூடிய தரமான ஒளிவிளக்குகள் ; (4) முகம் பார்க்கும் கண்ணாடி மேலாக முகத்தில் படக்கூடிய ஒளியூட்டல் ; (5) அலுமாரிகளில் கதவுகளால் தூண்டப்படும் ஒளியூட்டல் படுக்கை அறைகளில் பேணப்படும் பொருட்டு பரிந்துரைக்கப்பட்டுள்ள ஒளிமட்டங்கள் வருமாறு :- படுக்கை அறை பொதுவான ஒளியூட்டல் 75 Lux. வாசிப்பு (படுக்கையிலும் சாய்மனைக் கதிரையிலும்) 300 Lux. வாசிப்பு (படுக்கையிலும் சாய்மனைக் கதிரைகளிலும்) 300 Lux. முகம் பார்க்கு கண்ணாடிகளில் முகத்தில் ஒளியூட்டல் 300 Lux. | 125 |
| | | 6. கதவில் பொருத்தப்பட்ட பார்வைக் கருவியும் பாதுகாப்பு தாழ்ப்பாள். | 30 |
| | | 7. போதுமான அளவு மிக உயர்தரம் வாய்ந்த பருத்தியைக் கூடுதலாகக் கொண்ட உயர் சிறந்த தரமான படுக்கை விரிப்புகள், போர்வைகள் மற்றும் மெத்தை உறைகள். | 50 |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

| *சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள்* | | | |
|---|---|---|---|
| *இல.* | *நிரல் I பரப்பளவு* | *நிரல் II வசதிகள்* | *நிரல் III புள்ளிகள்* |
| | | *8. மிக நல்ல தரத்திலமைந்த தலையணைகள் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.* | *25* |
| | | *9. வேண்டப்பட்டால் வழங்கும் பொருட்டு ஒவ்வாமை எதிர்ப்பு தலையணை அடங்கலான தலையணை தெரிவுகள்.* | *25* |
| | | *10. போதுமான அளவில் நல்ல தரத்திலான உறிஞ்சக்கூடிய குளியல், முக மற்றும் கைத்துவாய்கள் வெள்ளை விரும்பத்தக்கது. மற்றும் குளியலறை கால் துடைக்கும் இரட்டுக்கள் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். படுக்கை விரிப்பு துவாய்களும் தினமும் அல்லது விருந்தினரால் கேட்டகப்பட்டவாறு மாற்றப்படல் வேண்டும். தரமான குளியல் உடுப்பும் செருப்பும் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.* | *50* |
| | | *11. முழு நீளக் கண்ணாடி* | *20* |
| *6.* | *குளியலறைகள்* | *1. குளியலறை தரை, சுவர் உட்கூரை ஆகிய முழு நிறைவாக உயரத்தில் செப்பனிடப்பட்டிருக்க வேண்டும்.* | *15* |
| | | *2. குளியலறை இணைப்புகளும் பொருத்திகளும் மிகவும் உயர்ந்த தரத்தில் இருத்தல் வேண்டும்.* | *25* |
| | | *3. சொகுசு/ ஆடம்பர ஹோட்டலுக்குப் பொருத்தமான பின்வரும் விடயங்கள் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும் :- (1) விசாலமான ஆடம்பர ஒப்பனைப் பொருள் மேசையுடன் கூடிய கழுவுதொட்டி அத்துடன் போதுமான இடத்துடன்கூடிய தட்டுகள் ; (2) நீர்த்தொட்டி ; (3) வழுக்காத பரப்புடைய அல்லது வழுக்காத பிடி கொண்ட குளியல் தொட்டி (ஆகக் குறைந்தது 160 செ. மீ. நீளத்தில்) ; (4) போதுமான நீர் அழுத்தத்துடன் சுவரில் மாட்டப்பட்ட ஷவர் ; (5) கைபிடே, கேசம் உலர்த்தி, வெளிச்சம் பூட்டப்பட்ட உருப்பெருக்கி கண்ணாடி, சர்வதேச மழிப்புக் கருவி பொருத்திகள், மூடப்பட்ட துப்புரவேற்பாட்டுத் தொட்டி, மலசலகூட தாள் தாங்கி ; (6) தொலைபேசி ; (7) போதுமான கைதுடைக்கும் கடதாசி ; (8) சவர்க்காரம், ஷம்பு, சீராக்கி, ஜெல், உடல் ஒப்பனைத் திரவியம், சவரம் செய்யும் உபகரணங்கள், குளியல் தொப்பி, சப்பாத்து மெருகூட்டிகள், இழுக்கக்கூடிய உடுப்பு காயப்போடும் கொடி என்பவற்றைக் கொண்ட மேனி ஒப்பனைப் பொருள்.* | *25* |
| | | *4. ஷவர் பிரிப்பு இருந்தால் அப்பிரதேசம் 1.14 சதுர மீற்றருக்குக் குறையாமலும் சிறிய அளவுகளில் 1.0 மீற்றருக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். ஷவர் பிரிப்பு பதப்படுத்தப்பட்ட அல்லது மென் தகடிட்ட, கண்ணாடியாலானதாக இருப்பது பரிந்துரை செய்யப்படுகின்றது. தரை வழுக்காத வகையில் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். பிடிப்பதற்கு ஒரு சலாகை இருத்தல் வேண்டும்.* | *25* |
| | | *5. அனைத்துக் குளியலறைகளிலும் நீர் சேமிப்பு வகையான பொருத்திகளும் பொருத்து பொருள்களும் இருப்பது பரிந்துரை செய்யப்படுகின்றது.* | *25* |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

*சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள்*

| இல. | நிரல் I<br>பரப்பளவு | நிரல் II<br>வசதிகள் | நிரல் III<br>புள்ளிகள் |
|---|---|---|---|
| | | 6. குளியல், ஷவர், கழுவுதொட்டி அனைத்திலும் சுடுநீரும் குளிர் நீரும் கலந்து வரக்கூடிய வசதி இருத்தல் வேண்டும். | 25 |
| | | 7. குளியலறைகளில் பொதுவான தரமான நல்ல மட்டத்தில் ஒளியூட்டல் இருக்கவேண்டியதுடன் கண்ணாடிகளில் முகத்தில் ஒளிபடும் வகையில் ஒளியூட்டல் வசதி இருத்தல் வேண்டும். ஒளியூட்டும் மட்டங்கள் வருமாறு :- குளியலறை (பொது ஒளியூட்டல்) 120 Lux முகஒளி (கண்ணாடி) 300 Lux ஒளி ஆளிகள் குளியலறைக்கு வெளியே இருத்தல் வேண்டும். | 25 |
| 7. | பராமரிப்பு | 1. உலர் சுத்திகரிப்பு வசதிகளுடன் கூடிய, அனைத்து ஹோட்டல் துணிகளையும் விருந்தினர் துணிகளையும் கையாளக்கூடிய ஒரு இயந்திரமய சலவைக்கூடம் அல்லது பொருத்தமான வெளி மூலங்களைப் பயன்படுத்தி அத்தகைய துணிகளைக் கையாளக்கூடிய வசதி இருத்தல் வேண்டும். | 25 |
| | | 2. புதிய துணிகள் மற்றும் பயன்படுத்தும் துணிகளை வைத்திருக்கக்கூடிய போதுமான நல்ல காற்றோட்டமுள்ள துணி அறை ஒன்று இருத்தல் வேண்டும். | 15 |
| 8. | சிற்றுண்டிச் சாலையும் மதுபானச்சாலையும் | 1. 24 மணி நேரமும் செயற்படும் ஒரு காப்பிக்கடை. | 50 |
| | | 2. அறையில் உணவருந்தும் வசதி 24 மணிநேரம் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 3. உண்டிச்சாலையின் சுவர்கள், தரை, உட்கூரை, கதவுகள், யன்னல்கள், மரவேலை மற்றும் பொருத்திகள் மிகவும் நன்றாகப் பேணப்பட வேண்டும். | 50 |
| | | 4. தளபாடங்கள் வசதியானதாகவும் செயற்படுவனவையாகவும் உயர் தரத்திலுள்ளவையாகவும் நல்ல நிலையில் பேணப்படுபவையாகவும் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 5. ஹோட்டல் அத்துடன் அல்லது உண்டிச்சாலையின் கருப்பொருளை தகுதியானதாக்குவதாய் அலங்காரமும் விரிப்புகளும் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 6. உணவருந்தும் பிரதேசத்தின் தளவிரிப்பு மிகவும் தரம் உயர்ந்ததாக இருத்தல் வேண்டுமென்பதுடன், மிகவும் நல்ல நிலையில் பேணப்படுதலும் வேண்டும். | 25 |
| | | 7. கைத்துணிகள் / கைக்குட்டைகள் உறிஞ்சக்கூடிய தரம் வாய்ந்த துணிகளால் ஆனதாய் குறைந்தது 48 X 48 செ. மீ. அளவில் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 8. உயர் தரத்திலமைந்த வெட்டுக்கருவிகள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள், பிற மேசைப் பொருட்கள் அத்துடன் போதுமான அளவிலான மேசை விரிப்புகள். | 50 |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

| சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள் | | | |
|---|---|---|---|
| இல. | நிரல் I<br>பரப்பளவு | நிரல் II<br>வசதிகள் | நிரல் III<br>புள்ளிகள் |
| | | 9. பணியாட்டொகுதியினர் பொருள்கள் பற்றிய உயர்மட்ட அறிவுடையவர்களாய் விரைவாக, வினைத்திறன்மிக்க சேவை வழங்கக்கூடியவர்களாய் இருத்தல் வேண்டும். | 50 |
| | | 10. உணவுகள் சரியான வெப்பநிலையில் வழங்கப்பட வேண்டும். உணவு குடிவகைகளைக் காட்சிப்படுத்தும் அனைத்துக் கூறுகளும் முறையான வெப்பநிலையைப் பேண வேண்டும். | 25 |
| | | 11. பட்டோலை (மெனு) மற்றும் குடிவகை/வைன் பட்டியல் சமர்ப்பித்தல் பாங்கு மற்றும் வசதி உட்பட விரிவாக்குவதற்கு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். | 25 |
| | | 12. தனித்துவமான சிற்றுண்டிச்சாலை | 25 |
| | | 13. ஹோட்டல் விருந்தினர் பயன்பாட்டுக்கு மட்டுமே உரித்தான மதுபானச்சாலை | 25 |
| | | 14. தனியான சேவை/வழங்கல் மதுபானசாலை இருத்தல் வேண்டும். | 25 |
| | | 15. மதுபானசாலை/சாலைகள் தனித்துவமான மிகத் திறமான பீடங்கள், மேசைகள், கதிரைகள் பொருத்திகளுடன் நன்கு தயார் நிலையில் இருத்தல் வேண்டும். அங்கு மெதுவான ஒளியூட்டல் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 16. மதுபானச்சாலையில் ஐஸ் கட்டிகள் தயாரிக்கும் இயந்திரம் இல்லாதவிடத்தும் ஐஸ் கட்டிகளைச் சேமித்து வைக்கக்கூடிய சுகாதாரமான ஒரு வசதி இருத்தல் வேண்டும். | 25 |
| | | 17. மதுபானச்சாலை/மதுபானச் சாலைகளில் வைன், ஸ்பிரிட் மற்றும் பிற குடிபானங்களை வழங்குவதற்குத் தேவையான அனைத்து வகையான கண்ணாடிப் பொருள்களும் இருத்தல் வேண்டும். | 50 |
| | | 18. பலவகையான உண்ணாட்டு வெளிநாட்டு வைன், ஸ்பிரிட் மற்றும் மதுபான வகைகள் போதிய அளவில் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். | 50 |
| | | 19. உணவருந்தும் மதுபானச்சாலைப் பிரதேசங்களில் மென்மையான சங்கீதம் பின்னணியில் ஒலிக்க வேண்டும். | 25 |
| 9. | சமையலறை | 1. பிரதான சமையலறை/ துணை சமையலறை, உணவு கொடுக்கும் பீடத்துக்கு அண்மையில் அமைந்திருக்க வேண்டும். | 50 |
| | | 2. சமையலறை தொழில் ரீதியாக வடிவமைக்கப்பட்டு வினைத்திறனான செயற்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் உபகரணங்களைக் கொண்டிருக்க வேண்டும். வெவ்வேறு செயற்பாட்டுப் பிரதேசங்கள் வெவ்வேறாக இருத்தல் வேண்டும். | 50 |

***அட்டவணை* IV *(தொடர்ச்சி)***

| *சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள்* | | | |
|---|---|---|---|
| *இல.* | *நிரல் I பரப்பளவு* | *நிரல் II வசதிகள்* | *நிரல் III புள்ளிகள்* |
| | | 3. தரைகள், சீலிங்குகள், கதவுகள், யன்னல்கள், யன்னல் சட்டங்களின் மரவேலை என்பன மிகவும் துப்புரவாக நல்ல நிலையில் இருத்தல் வேண்டும். அனைத்து சமையலறை சுவர்களும் எளிதில் துப்பரவாக்கக்கூடியதாகவும் தரையிலிருந்து 150 செ. மீ. வரை நீர் புகமுடியாதபடி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். | 25 |
| | | 4. போதுமான வகையில் ஒளியூட்டப்பட்டிருக்க வேண்டும். விளக்குகள் நொருங்காத, எளிதில் துப்புரவு செய்யக்கூடிய பரப்பிகள் வழங்கப் பட்டிருத்தல் வேண்டும். | 25 |
| | | 5. சமையல் மேடையும் தட்டுகளும் துருப்பிடிக்காத உருக்கு அல்லது நீர் புகமுடியாத உலோகமல்லாப் பொருள்களால் ஆனதாய் இருத்தல் வேண்டியதுடன் நல்ல நிலையில் பேணப்பட வேண்டும். | 25 |
| | | 6. சமையலறை உபகரணங்கள் நல்ல தரம் வாய்ந்ததாகவும் துப்பரவானதாகவும் போதுமானதாகவும் இருத்தல் வேண்டும். | 50 |
| | | 7. சகல சர்வதேச உணவுகளையும் தயாரிப்பதற்குத் தேவைப்படும் அனைத்து வகை உபகரணங்களையும் சமையலறை கொண்டிருக்க வேண்டும். | 50 |
| | | 8. சமைக்கப்பட்ட மற்றும் சமைக்கப்படாத உணவுகளனைத்தும் எந்நேரமும் மூடப்பட்டு நன்றாகப் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். | 50 |
| | | 9. முறையான வெப்பக்கட்டுப்பாட்டுடன் கூடிய வெப்ப மற்றும் குளிர் உணவு தாங்கிக்கூறுகள் போதுமானதாக இருத்தல் வேண்டும். | 75 |
| | | 10. சமையலறையானது பூச்சிகள், எலிகள் வராததாய் இருத்தல் வேண்டும். தேவைப்படும் அனைத்து சமையலறைக் கதவுகள், யன்னல்களுக்கு ஈ தடுப்பு வலை பொருத்தப்பட்டு இருத்தல் வேண்டும். முக்கியமான இடங்களில் மின் பூச்சிகொல்லிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். | 25 |
| | | 11. சமையலறையில் உணவுகள் சேமிக்கப்படும் அனைத்து அலுமாரிகளும் கறைபடா உருக்கினால் அல்லது நீர்புகாத பொருளினால் ஆக்கப் பட்டிருக்க வேண்டும். | 50 |
| | | 12. சேமிப்பதற்குப் போதுமான கறைபடா உருக்கு தட்டுகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். | 25 |
| | | 13. சமையலறை உபகரணங்கள், கண்ணாடிப் பாண்டங்களை வைப்பதற்குப் போதுமான கறைபடா உருக்குத் தட்டுகள் அல்லது பிறை பொருத்தமான பொருட்கள் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 14. உணவுத் தயாரிப்பு, காட்சிக்கு வைத்தல் மற்றும் பரிமாறலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களுக்கு அமைவான உயர்மட்ட தூய்மையும் சுகாதாரமும் பேணப்பட வேண்டும். | 50 |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

| சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள் | | | |
|---|---|---|---|
| இல. | நிரல் I<br>பரப்பளவு | நிரல் II<br>வசதிகள் | நிரல் III<br>புள்ளிகள் |
| | | 15. சமையலறைச் சூழவுள்ள அனைத்து கழிவு நீர் கால்வாய்களும் மூடப்பட்டு கொழுப்பு பிரித்தெடுப்புக்கு இட்டுச்செல்லும் மூடிய குழாய் வலையமைப்புடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். கழிவுநீர் குழாய் வலையமைப்பை முறையாகத் துப்புரவு செய்வதற்கு ஏதுவான வசதிகள் இருத்தல் வேண்டும். சமையலறையினுள் திறந்த கால்வாய் எதுவும் இருத்தலாகாது. | 75 |
| | | 16. அனைத்து சமையலறைத் தொட்டிகளிலும் நல்ல தரமான துப்புரவாக்கக்கூடிய வடிகட்டிகள் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 17. அங்கீகாரிக்கப்பட்ட சர்வதேச தரத்திற்கமைய போதுமான உட்செல்லக்கூடிய அத்துடன் அணுகக்கூடிய குளிர் அறைகள், அதிகுளிரூட்டிகள் மற்றும் உருகுநிலை வசதிகள் இருத்தல் வேண்டும். | 50 |
| | | 18. காலினால் இயங்கும் கைத்தொழில் வகையான மூடியுடன்கூடிய கழிவுத்தொட்டிகள் போதுமான அளவில் இருத்தல் வேண்டும். வெவ்வேறு வகைக் கழிவுப் பொருட்களுக்குத் தனியான தொட்டிகள் இருத்தல் வேண்டும். | 50 |
| | | 19. சமையலறையின் ஒவ்வொரு செயற்பாட்டுப் பிரதேசத்திலும் தனியான சுடுநீர், குளிர்நீர் வசதிகளுடன் கூடிய கைகழுவும் தொட்டிகள், சவர்க்காரம் மற்றும் எறியத்தகு துவாய்கள் அல்லது கை உலர்த்திகள் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். | 50 |
| 10. | சுகாதார தேவைப்பாடுகள் | 1. அனைத்து சுகாதார நிறுவுகைகளின் தரம், தொழிற்பாடு மற்றும் பேணுகை என்பன மிகவும் உயர் தரமானதாக இருத்தல் வேண்டும். துப்புரவேற்பாடு சுத்தம், சுகாதாரம் தொடர்பாக கண்டிப்பான நியமங்கள் ஹோட்டல் கட்டிடத்திலும் சுற்றுச் சூழலிலும் பேணப்பட வேண்டும். | 50 |
| | | 2. சமையலறைக் கழிவு நீரிலிருந்து கொழுப்பை வேறுபடுத்துவதற்கான செயற்பாட்டு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். தனிப்படுத்தப்பட்ட சமையலறைக் கழிவுநீர், சாக்கடை மற்றும் ஆடைகள் கழுவும் கழிவுநீர் சுற்றாடல் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகப் பரிகரிக்கப்பட வேண்டும். | 25 |
| | | 3. எளிதில் துப்பரவு செய்வதற்கு உகந்த முடிவுப் பொருளினாலானதும் உயர் சுகாதார தரத்தைப் பேணுவதுமான போதுமான வசதிகளுடன்கூடிய தனியான அர்ப்பணிப்புடன் கூடிய வரவேற்புப் பிரதேசம் ஒன்று இருத்தல் வேண்டும். மீன், இறைச்சி, பழங்கள், காய்கறி வகைகளைச் சுத்தம் செய்வதற்கான இடப்பரப்பானது உயர் சுகாதார நியமங்களைப் பேணுவதற்கென கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். | 25 |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

*சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள்*

| *இல.* | *நிரல் I பரப்பளவு* | *நிரல் II வசதிகள்* | *நிரல் III புள்ளிகள்* |
|---|---|---|---|
| | | 4. முழுக் கட்டடத்திலும் உடனடி சூழலிலும் பயனுறுதிமிக்க பூச்சிபுழுப் பாதுகாப்பு என்பன செய்யப்பட வேண்டும். சுற்றுப்புற சூழல் துப்பரவாகவும் இலையான்கள், நுளம்புகள் வளர இடம் கொடாது இருப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். | 25 |
| | | 5. பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் மற்றும் தொற்றுநீக்கிகள் உயிர் அழிவுக்குட்பட்டதாயிருத்தல் வேண்டும். | 25 |
| 11. | இடர்காப்பும் பாதுகாப்பும் | 1. ஹோட்டல் வடிவமைக்கும்போது சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். | 50 |
| | | 2. ஹோட்டலானது தனது விருந்தினர்கள் அவர்களது உடைமைகளுக்குக் காப்பும் பாதுகாப்பும் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். இதனை எய்துவதற்குத் தேவையான கண்காணிப்பு வழிமுறைகள் ஒழுங்காக இருக்க வேண்டும். | 25 |
| | | 3. அனைத்து எரிவாயு மற்றும் மின் உபகரணங்கள் நிறுவுகைகள் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு அமைந்ததாய் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 4. அவசர காலத்தில் பயன்படுத்தும் பொருட்டு சக்கர நாற்காலிகளும் நோயாளி காவு படுக்கைகளும் கிடைக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும். | 25 |
| 12. | களியாட்ட பொழுதுபோக்கு மற்றும் பிற வசதிகள். | 1. ஹோட்டலானது இலங்கையின் பாரம்பரிய கலாச்சாரம், நடனம், இசைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் விருந்தினருக்குப் பொழுதுபோக்கு வழங்குதல் வேண்டும். | 25 |
| | | 2. ஹோட்டலின் கருதுகோள்/நோக்கத்திற்கு அமைவாகப் போதுமான ஓய்வு நடவடிக்கைகளும் வசதிகளும் இருத்தல் வேண்டும்.<br><br>நடவடிக்கைகளையும் வசதிகளையும் பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்யலாம். எழுச்சியூட்டல் நிகழ்ச்சிகள், உடற்பயிற்சி, யோகா, குதிரைச் சவாரி, தியானம், பறவைக் காட்சி, இயற்கைத்தடம், நீர் விளையாட்டுக்கள், ரென்னிஸ், ஐம்பந்தாட்டம், கைப்பந்தாட்டம், மேடைவருப்பந்து, சிறுவர்களுக்கான விளையாட்டு, பிலியாட், ஸ்நூகர், ஸ்பா, உடல் பிடித்து விடுதல், ஆயுர்வேத/மருத்துவ ஸ்பா, ஜகுசி, ஜிம்னேசியம், வாடவை சைக்கிள், நூலகம், இரவுக்களரி/டிஸ்கோ. குறிப்பு.- நிரற்படுத்தப்பட்டவற்றில் 50% இக்கு மேலான விடயங்களிருப்பின் முழுப்புள்ளிகள் பெறக்கூடிய தகைமை கிட்டும். | 50 |
| | | 3. நவீன உபகரணங்கள் வசதிகள் கொண்ட முறையாக வடிவமைக்கப் பட்ட வசதியான மாநாட்டு அறை கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். | 50 |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

*சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள்*

| *இல.* | *நிரல் I*<br>*பரப்பளவு* | *நிரல் II*<br>*வசதிகள்* | *நிரல் III*<br>*புள்ளிகள்* |
|---|---|---|---|
| | | 4. களியாட்டப் பிரதேசம் தனியான வாயிலையும் போதுமான தனிப்பட்ட முறைமைப்பட்ட கழிவறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். களியாட்ட வசதிகள் ஹோட்டலின் தரத்துக்கு அமைய இருத்தல் வேண்டும். | 75 |
| | | 5. களியாட்ட இடத்துக்கு அண்மையில் தனியான கழுவுதல் சேமிப்பு வசதிகளுடன் கூடிய சமையலறை இருப்பது விரும்பத்தக்கது. | 75 |
| | | 6. விருந்தினர் தேவைக்கேற்றவாறு போதுமான பணியாட்டொகுதியுடன் கூடிய வியாபார நிலையம் இருத்தல் வேண்டும். | 50 |
| 13. | நீச்சல் தடாகம் | 1. ஹோட்டலின் அளவுக்குப் பொருத்தமாக நியாயமான அளவிலான நீச்சல் தடாகம் இருத்தல் வேண்டும். தடாகத்தின் எண்ணக்கரு, வடிவமைப்பு, நிருமாணம் சர்வதேச ரீதியில் அங்கீகாரிக்கப்பட்ட பாதுகாப்பு நியமங்களுக்கு அமைவுற இருத்தல் வேண்டும். தடாகத்தைப் பயன்படுத்துவோரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் எதுவும் தடாகத்தில் காட்டப்படக் கூடாது. எளிதில் புலனாகக்கூடிய மற்றும் அணுகக்கூடிய இடங்களில் போதுமான பாதுகாப்பு உபகரணங்கள் கிடைக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும். | 50 |
| | | 2. நீச்சல் தடாகம் செயற்படும்போது பொருத்தமாக தகைமைபெற்ற உயிர் காப்பாளர்கள் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 3. தடாகத்துக்கு அண்மையில் போதுமான அளவு ஷவர்கள் அமைக்கப் பட்டிருத்தல் வேண்டும். ஓடுகின்ற சுடுநீர், குளிர் நீர் வசதிகள் கொண்ட ஷவர் அடைப்புடன்கூடிய ஆண்களுக்கும் பெண்களுக்குமான தனியான தடாக ஆடை மாற்றும் அறைகள் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். போதுமான ஆடைப்பெட்டிகள் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 4. நீச்சற் தடாகம் போதியளவு ஒளியூட்டப்பட்டிருத்தல் வேண்டும். | 25 |
| | | 5. அதி உன்னத தரம் வாய்ந்த போதிய தடாக மேற்தட்டு தளபாடங்கள் கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 6. தடாகத்துக்கருகே உணவு குடிபான சேவை இருத்தல் வேண்டும். தடாக சேவையில் உயர்தர உடையாத கண்ணாடி பாண்டங்கள் பயன்படுத்தப்படவேண்டும். | 25 |
| 14. | மாற்றுத் திறனாளி விருந்தினருக் கான வசதிகள் | 1. மாற்றுத் திறனாளி விருந்தினர்கள் பொருட்டு ஆகக்குறைந்தது 01 விருந்தினர் அறையாவது கீழ்த்தளத்தில் இருப்பது விரும்பத்தக்கது. | 50 |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

| சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள் | | | |
|---|---|---|---|
| இல. | நிரல் I<br>பரப்பளவு | நிரல் II<br>வசதிகள் | நிரல் III<br>புள்ளிகள் |
| 15. | பொது கழிவறைகள். | 1. ஹோட்டலின் கொள்ளளவு மற்றும் நடவடிக்கைகளுக்கு அமைவாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் போதுமான கழிவறை வசதிகள் இருத்தல் வேண்டுமென்பதுடன், அவை வசதியாக அமைக்கப் பட்டிருத்தலும் வேண்டும். | 25 |
| | | 2. நிறுவுகைகளும் உபகரணங்களும் WC உடன் கைபிடே, துடைப்புத்தாள் தாங்கி, தண்ணீர் கலக்கின்ற குழாயுடன்கூடிய ஓடுகின்ற சுடுநீர் மற்றும் குளிர்நீர் கழுவு தொட்டி, ஆடம்பர பீட இடம், முகம்பார்க்கும் கண்ணாடிகள், சவர்க்காரம் அல்லது சவர்க்காரம் வெளியேற்றி, எறியக்கூடிய துவாய்கள் அல்லது சூடான வளி கை உலர்த்தி மற்றும் மூடப்பட்ட சுகாதார தொட்டிகள் அத்துடன் சுகாதாரப் பைகள், கழிவுத் தொட்டிகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். | 25 |
| | | 3. கழிவறை போதுமான அளவில் காற்றோட்டமுள்ளதாயிருத்தல் வேண்டும். | 25 |
| 16. | பணியாட் டொகுதியினர் | 1. பொது முகாமையாளர் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் பாடசாலை/ நிறுவகத்திலிருந்து விருந்தோம்பல்/ உணவு வழங்கல் முகாமைத்துவத்தில் பட்டம் அல்லது டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். அல்லது விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் போதுமான அனுபவம் பெற்றவராய் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 2. அனைத்துப் பகுதித் தலைவர்களும் உயர் தொழிற் தகைமையும் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும். | 25 |
| | | 3. நிறைவேற்று உத்தியோகத்தர்கள்/முகாமைத்துவ பணியாட் டொகுதியினர் தொழிற்தேர்ச்சி பெற்றவர்களாய் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் ஒன்றில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம் பெற்றவராயிருத்தல் வேண்டும். நிரந்தர பணியாட்டொகுதியினரில் 75% மானோரது தொடர்புற்ற துறையில் ஏதாவது சான்றிதழ் பெற்றருக்க வேண்டும். சான்றிதழ் சம்பந்தப்பட்ட அமைச்சின் மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சித் திணைக்களத்தினால் அங்கீரகரிக்கப்பட்டிருக்க வேண்டும். | 50 |
| | | 4. திருப்திகரமான விருந்தினர் சேவை வழங்குமுகமாக ஹோட்டல் போதுமான பணியாட்டொகுதியினரைக் கொண்டிருப்பதுடன் செயற்பாடு/சேவைப் பணியாட்டொகுதியினர் உயர்தர சேவைத்திறன் பெற்றவராயிருத்தல் வேண்டும். சேவைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு ஒழுங்கான உள்ளகப் பயிற்சி மற்றும் தொழில் செய்கையின் போது பயிற்சி நடாத்தப்பட வேண்டும். | 25 |
| | | 5. ஹோட்டல் பணியாட்டொகுதியினர் பொருட்டு ஆங்கிலம் பிற அந்நிய மொழிகளில் பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்தல் வேண்டும். | 50 |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

| சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள் | | | |
|---|---|---|---|
| இல. | நிரல் I<br>பரப்பளவு | நிரல் II<br>வசதிகள் | நிரல் III<br>புள்ளிகள் |
| | | 6. பணியாட்டொகுதியினர் அனைவரும் சீருடை அணிந்திருத்தல் வேண்டும். சீருடைகள் முறையானதாகவும் ஹோட்டலின் கருதுகோளுக்கு அமைவானதாகவும் இருத்தல் வேண்டும். | 25 |
| | | 7. பணியாட்டொகுதியினருக்கு இருப்பிட வசதி வழங்கப்பட்டிருக்கு மிடத்து, கட்டடம் நல்ல காற்றோட்டமுள்ளதாயும் ஆகக்கூடிய அளவு இயற்கை ஒளியூட்டல் கொண்டிருத்தல் வேண்டும். தரை துப்பரவு செய்வதற்கு எளிதாக நீர்புகாத பொருள்களினால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு நபருக்கு வழங்கப்பட்ட தரைப் பிரதேசம் 5 சதுர மீற்றருக்குக் குறையாது இருத்தல் வேண்டும். அத்துடன் வசதியான கட்டில்களும் பொருத்தமான மெத்தைகளும் வழங்கப்பட வேண்டும். சுவர்கள் சீராகவும் துப்பரவாயுமிருப்பதற்கு உகந்த வகையில் முடிக்கப்பெற்றதாயும் இருத்தல் வேண்டும். | 75 |
| | | 8. வசதியாக பணியாட்டொகுதியினர் பொருட்டு ஒருவருக்கு 0.13 கன மீற்றருக்குக் குறையாத இடம் வழங்கப்பட வேண்டும். லொக்கரின் உயரம் 90 செ.மீ.க்குக் குறையாமலும் ஆழம் 45 செ.மீற்றருக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். லொக்கர்கள் நல்ல காற்றோட்டமுள்ளதாயிருத்தல் வேண்டும். | 50 |
| | | 9. வதியும் பணியாட்டொகுதியினர் பொருட்டு ஒருவருக்கு 0.3 க. மீ குறையாத இடம் வழங்கப்பட வேண்டும். லொக்கரின் உயரம் 90 செ.மீ. க்குக் குறையாமலும் ஆழம் 45 செ.மீ. க்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். லொக்கர்கள் நல்ல காற்றோட்டமுள்ளதாயிருத்தல் வேண்டும். | 50 |
| | | 10. பணியாட்டொகுதியினர் பாதுகாப்புப் பெட்டி அறைகளில் /சாலைகளில் பணியாட்டொகுதியினரின் வசதி பொருட்டு போதுமான நல்ல தரமான வசதியான தளபாடங்கள் இருத்தல் வேண்டும். | 10 |
| | | 11. விருந்தினர்களுக்குத் தென்படாத வகையில் வதிவிட பணியாட்டொகுதியினர் ஆடைகளைத் தோய்ப்பதற்கும் உலர்த்துவதற்கும் பொருத்தமான இடம் ஒதுக்கப்பட வேண்டும். | 25 |
| | | 12. பணியாட்டொகுதியினருக்கான உணவு தனியாகத் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் சந்தர்ப்பங்களில், போதிய உபகரணங்களுள்ள துப்பரவான பணியாட்டொகுதியினர், சமையலறை, கிடைக்கக்கூடிய தாய் இருத்தல் வேண்டும். சமையலறை உபகரணங்களைக் கழுவும் பொருட்டு ஓடுகின்ற சுடுநீர், குளிர்நீர் கலக்கக்கூடிய வசதியுடைய குழாய்கள் இருத்தல் வேண்டும். பணியாட்டொகுதியினர் சமையலறையில் பூச்சிகள், எலிகள் இல்லாதிருத்தல் வேண்டும். | 75 |
| | | 13. பணியாட்டொகுதியினருக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் முறையாகப் பயன்படுத்தப்பட்டு நன்கு பேணப்படுகின்ற என்பதை ஹோட்டல் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். | 30 |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

*சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள்*

| இல. | நிரல் I<br>பரப்பளவு | நிரல் II<br>வசதிகள் | நிரல் III<br>புள்ளிகள் |
|---|---|---|---|
| | | 14. பணியாட்டொகுதியினருக்கு உணவு வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் பணியாட்டொகுதியினர் உணவு உண்ணும் அறை நன்கு காற்றோட்டமுள்ளதாயிருத்தல் வேண்டும். தரை, நீர்புகாத பொருள்களால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும். துப்பரவாக்குவதற்கு வசதியாக சுவர்கள் நீர்புகாத பொருளால் 150 செ. மீற்றர் வரை மூடப்பட்டிருத்தல் வேண்டும். உணவருந்தும் பிரதேசம் ஒருவருக்கு ஆகக் குறைந்தது 1.5. சதுர மீற்றருக்கு இருத்தல் வேண்டும். உறைகளின் மொத்த எண்ணிக்கை ஒரே அமர்வில் மொத்தப் பணியாட்டொகுதியினரின் 30% க்குப் பரிமாறக்கூடியதாய் இருத்தல் வேண்டும். மேசை நீர்புகாத எளிதில் துப்பரவு செய்யக்கூடிய பொருளால் மூடப்பட்டிருத்தல் வேண்டும். பீங்கான், கோப்பை, முள் கரண்டிகள், கண்ணாடிப் பொருள்களை கழுவும் பொருட்டு சுடுநீர் தண்ணீர் கலப்பு வசதிகளுடைய ஆகக் குறைந்தது இரண்டு கழுவு தொட்டிகள் இருத்தல் வேண்டும். போதுமான கை கழுவும் இடங்கள் சவர்க்காரம் மற்றும் கை உலர்த்தி வசதிகளுடன் இருத்தல் வேண்டும். | 75 |
| | | 15. புதிதாக சேர்க்கப்பட்ட அனைவருக்கும் ஹோட்டல் சுற்றாடல் ஒன்றிற்கான சொந்த தோற்றம், சுகாதார மற்றும் பொது வசதிகள் ஆகியவற்றின் இணக்கப்பாடுகளில் பயிற்சியளிக்கப்படல் வேண்டும். எழுத்துமூலமான பொது அறிவுறுத்தல்கள், வழிகாட்டுநெறிகள், நடத்தைக் குறியீடு ஆகியறை பணியாட்டொகுதியினருக்கு வழங்கப்பட வேண்டும். | 25 |
| | | 16. ஹோட்டல் பணியாட்டொகுதியினருக்கு ஒழுங்கான பயிற்சி அளித்தல் வேண்டும். பயிற்சி பொருத்தமான தகைமைபெற்ற பயிற்சியாளர்களால் நடாத்தப்பட்டு பயிற்சிப் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். | 50 |
| | | 17. பணியாட்டொகுதியினருக்கு தொலைக்காட்சி அடங்கலான போதுமான பொழுதுபோக்கு வசதிகள் இருத்தல் வேண்டும். ஆகக் குறைந்தது 02 உள்ளக விளையாட்டுக்களும் 02 வெளிப்புற விளையாட்டுக்களுக்கான வசதிகளும் இருத்தல் வேண்டும். புதினப் பத்திரிகைகள் மற்றும் போதுமான வாசிப்புப் பொருள்களுடனான தனியானதொரு நூலகம் அல்லது வாசிப்பு அறை இருத்தல் வேண்டும். பணியாட்டொகுதியின் பயன்பாட்டுக்கான தனியான உள்ளக கணினி அறை ஒன்று விதந்துரைக்கப்பட வேண்டும். பணியாட்டொகுதி கடை ஒன்று பணியாட்டொகுதியின் வசதிக்காக கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட வேண்டும். | 50 |
| | | 18. தகைமைவாய்ந்த ஒரு பயிற்றுவிப்பாளரின்கீழ் செயற்படும் முழுமையான சாதனமயப்படுத்திய பயிற்சிப்பகுதியொன்று ஹோட்டலில் இருத்தல் வேண்டும். போதுமான வசதிகளுடன்கூடிய தனியான அறை ஒன்று பயிற்சி பொருட்டு இருத்தல் வேண்டும். அனைத்து ஹோட்டல்களும் தனியானதொரு பயிற்சிக் கைநூலை வைத்திருத்தல் வேண்டும். அதனடிப்படையில் பயிற்சியளிக்கப்படும் வெவ்வேறு மட்டப் பணியாட்டொகுதியினர் பொருட்டு பாடத் | 50 |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

| சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள் | | | |
|---|---|---|---|
| இல. | நிரல் I<br>பரப்பளவு | நிரல் II<br>வசதிகள் | நிரல் III<br>புள்ளிகள் |
| | | திட்டங்களைப் பயிற்சிக் கைநூல் கொண்டிருக்க வேண்டும். பயிற்சி முகாமையாளர் பயிற்சி அட்டவணை ஒன்றைத் தொகுத்து பயிற்சியளிக்கப்பட்ட காலத்தில் பங்குபற்றியோரின் பெயரைக் குறிப்பிட வேண்டும். அதற்கமைவாக காலத்துக்குக்காலம். பணியாட்டொகுதியினர் மதிப்பீடு நடாத்தப்படும். | |
| 17. | சுற்றாடல் மற்றும் சமுதாயம் நீடித்திருத்தல் | 1. ஹோட்டலில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்டு நன்கு பேணப்பட்டுவரும் சாக்கடை மற்றும் கழிவுநீர் பரிகரிப்பு பொறி/முறைமை இருத்தல் வேண்டும். பரிகரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டவை பயனுறுதியுடன் நீர்ப்பாவனையைக் குறைக்கும் வகையில் மீள் வட்டத்துக்குட்பட வேண்டும். பொறிக்கு செயல்நிறைவேற்ற பரீட்சிப்பு சான்றிதழ்கள் கிடைக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும். | 25 |
| | | 2. சுடுநீர் தேவை பொருட்டு சூரிய சக்தி முறை சூடாக்கல் முறைமை பயன்படுத்தப்பட வேண்டும். | 25 |
| | | 3. சுடுநீருற்பத்தியில் பயனுறுதிமிக்க சக்தி வினைத்திறன் முறைகள் அதாவது காற்றைக் குளிர்ப்படுத்தும் வளிச்சீராக்கி முறைமைகளில் பயனுறுதிமிக்க வளியிலிருந்து நீர் வெப்பமாற்றி சுடுநீர் தயாரிப்பு முறைமை, வெப்ப பம்பி முறைமை முதலியன பயன்படுத்தப்பட வேண்டும். | 25 |
| | | 4. மாற்று புதுப்பிக்கத்தக்க எரிபொருள் அத்துடன் சக்தி பயன்படுத்தப்பட வேண்டும். (உம். மின் உற்பத்தியில் எரிபொருளாக கிரிலிசிடியா, காற்றுச்சக்தி, சூரிய சக்தி). | 25 |
| | | 5. பயனுறுதிமிக்க சக்தி பாதுகாப்பு வழிமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும். வழிமுறைகளின் பயனுறுதி வரலாற்றுத் தரவுகளால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும். | 25 |
| | | 6. முறைமை ஒன்று கழிவுகளை மீள வட்டத்துக்குட்படுத்துவதற்கான இடப்பட்டிருத்தல் வேண்டும். உணவுக் கழிவுகள் கலவையிடப்பட்ட பசளையாக அல்லது விலங்குணவாகப் பயன்படுத்தப்படவேண்டும். திண்மக் கழிவுகள் மீள்வட்டம் பொருட்டு தனிவேறாக்கப்படுதல் வேண்டும். மீள் வட்டத்துக்குட்படுத்துவதற்கான திண்ம கழிவுகள் தனிவேறாக்கப்பட்டு அகற்றுவதற்கு மிகவும் தெளிவான ஒழுங்கு ஒன்று இருத்தல் வேண்டும். | 25 |
| | | 7. பிளாத்திற்கு, பொலித்தீன; PVC பயன்பாடு ஊக்குவிக்கப்படாது இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவற்றின் பாவனையைக் குறைப்பதற்கான கொள்கை ஒன்று இருத்தல் வேண்டும். கண்ணாடிப் போத்தல்கள், கண்ணாடி சாடிகள் போன்ற மீள் வட்டத்துகுட்படுத்தக் கூடிய கொள்கலன்களின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட வேண்டும். | 25 |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

| சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் ஏதேனும் நட்சத்திர வகுதிகளுக்கான கட்டாயமற்ற தேவைப்பாடுகள் | | | |
|---|---|---|---|
| இல. | நிரல் I<br>பரப்பளவு | நிரல் II<br>வசதிகள் | நிரல் III<br>புள்ளிகள் |
| | | 8. அயலவருக்கும் பிரதேசத்துக்கும் நலன் பயக்கும் முறைமை ஒன்று இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவற்றை அர்த்தமுள்ளதாக்கும் பொருட்டு ஆட்சேர்ப்பு, பெறுகை கொள்கை ஒன்று இருத்தல் வேண்டும். | 25 |
| | | **மொத்தப் புள்ளிகள்** | **5,000** |

5- 74/2

---

ச.வ.- பீ. 9/2005

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம்**

இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் மதியுரையின் மீது, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான, அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ஜோன் அந்தோனி இம்மானுவல் அமரதுங்க,
சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும்
கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016, ஏப்பிறல் 19.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2016 ஆம் ஆண்டின 2 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறை (சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் நடத்தைக் கோவை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2016, மே 20 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டலொன்றின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் ஒருவர், அத்தகைய ஹோட்டலை வந்தடைகின்ற ஒவ்வொரு சுற்றுலாப் பயணி தொடர்பிலும், பின்வரும் விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு ஒன்றைப் பேணுதல் வேண்டும் :

(அ) பெயர், திகதி மற்றும் வந்தடையும் நேரம் ;
(ஆ) கடவுச்சீட்டு இலக்கம் ;
(இ) நாட்டினம் ;
(ஈ) நிரந்தர முகவரி ;
(உ) அஞ்சல் அனுப்பப்பட வேண்டிய அடுத்த முகவரி ;
(ஊ) அறை இலக்கம் ;
(எ) புறப்படும் திகதியும் நேரமும் ;
(ஏ) விலைப்பட்டியலின் தொகையும், கொடுப்பனவு செய்யப்பட்ட நாணயமும் ;
(ஐ) கையொப்பம் ; அத்துடன்
(ஒ) அதன்கண் உள்ளடக்கப்பட வேண்டும் என பணிப்பாளர் தலைமையதிபதி காலத்துக்குக்காலம் தேவைப்படுத்தக்கூடியதான ஏதேனும் வேறு தகவல்.

3. (1) பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றினால் வழங்கப்படும் சேவைகளுக்கும் வசதிகளுக்கும் சுற்றுலாப் பயணிகளினால் கொடுப்பனவு செய்யப்படும் முறையும் விதமும் அத்துடன் அத்தகைய கொடுப்பனவினை ஏற்றுக்கொள்ளும் முறையும் விதமும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதன் சார்பில் காலத்திற்குக் காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கு இணங்க இருத்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் (1) ஆம் பந்தியின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பு (420 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தினையும் (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினையும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகளின் ஏற்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றுக்கு ஒத்திசைவானதாக இருத்தல் வேண்டும்.

(3) எவரேனும் ஆள் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்றவிடத்து, ஹோட்டலின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் மற்றும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுவதில் ஏதேனும் கொடுப்பனவை உண்மையிலேயே கோரியுள்ள அல்லது ஏற்றுக்கொண்டுள்ள ஆள், தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும்.

4. (1) பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் :-

(அ) சூழலைப் பாதுகாப்பது தொடர்பில் எவையேனும் சட்டங்களை மீறாத வகையிலும் ;

(ஆ) இலங்கை சமுதாயத்தில் நிலவுகின்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கநெறி மரபுகள் மற்றும் இலங்கையின் கலாசார மரபுரிமைக்கு முரண்படாத அல்லது மீறாத வகையிலும் ; அத்துடன்

(இ) அத்தகைய ஹோட்டல் தொடர்பில் வழங்கப்படும் பதிவுச்சான்றிதழில். உரிமத்தில் மற்றும் வகைப்படுத்தல் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க அதியுயர் நியமங்கள் மற்றும் வசதிகளையுடைய சேவைகளை அதனுடைய வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்ற வகையிலும் ;

அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்ற பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் ஒருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதென சார்த்தப்பட்டிருக்கின்றவிடத்து, பதிவுசெய்யப்பட்ட உரிமையாளருக்கு முன்னரான அறிவித்தலுடன் அல்லது அறிவித்தலின்றி பணிப்பாளர் தலைமையதிபதி அவரால் பெறப்பட்ட அவருடைய சொந்த பிரேரணை அல்லது முறைப்பபாடொன்றிற்கான விசாரணை ஒன்றை அல்லது அதே இடத்திலான புலனாய்வொன்றை நிறைவேற்றலாம்.

5. (1) ஏதேனும் சுற்றுலாப்பயணி ஹோட்டலானது, இவ்வொழுங்குவிதிகளின் கீழான பதிவொன்றை பெற்றுக்கொள்ளாதவிடத்து-

(அ) "பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல்" என்னும் சொற்களை அல்லது ஒன்றில் தனியாக அல்லது வேறு ஏதேனும் சொற்களுடன் அல்லது எழுத்துக்களுடன் இணைந்து "சுற்றுலாப்பயணி ஹோட்டல்" என்றும் சொற்களை உள்ளடக்கிய ஏதேனும் பெயரை அல்லது நியமனப் பெயரை பயன்படுத்துதலோ அல்லது வெளிக்காட்டுதலோ ; அல்லது

(ஆ) அது சுற்றலாப் பயணி ஹோட்டல் அல்லது பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாக இருக்கின்றதென உட்கிடையாக உணர்த்தும் ஏதேனும் பெயரை, பட்டப்பெயரை சோத்தலை அல்லது விவரத்தைப் பயன்படுத்துதலோக

தவறொன்றாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக, பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டலொன்றாக உள்ள சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்று, விளம்பர நோக்கத்திற்காக அத்தகைய விடுதியினால் பயன்படுத்தப்படும் ஏதேனும் அடையாளம், அல்லது ஏதேனும் துண்டுப்பிரசுரம், விளம்பர அட்டை, சுவரொட்டி, அறிவித்தல், சைகை, அடையாளக் குறி அல்லது வேறு ஏதேனும் சாதனம் எவற்றிலும் "சுற்றுலாப்பயணி ஹோட்டல்" அல்லது "பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல்" என்னும் சொற்களைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாட்டை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*ச.வ.- பீ. 9/2005*

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம்**

*இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையின் மீது, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (3) ஆம் (6) ஆம் உட்பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 69 ஆம் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ஜோன் அந்தோனி இம்மானுவல் அமரதுங்க,
சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும்
கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2016, ஏப்பிறல் 19.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறை (சுற்றுலாப்பயணி ஹோட்டல்களைப் பதிவுசெய்தலும் அதற்கு உரிமமளித்தலும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2016, மே 20 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*2. (1)* ஆளெவரும், வளவுகளையும் அத்தகைய வளவுகளில் சுற்றுலாப்பயணி ஹோட்டல் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு விரும்புகின்ற ஆளையும் முறையே இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாகவும், பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் ஒருவராகவும் பதிவுசெய்யப்பட்டிருந்தாலன்றி, சுற்றுலாப்பயணி ஹோட்டல் தொழில் ஒன்றைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக ஏதேனும் வளவுகளைப் பயன்படுத்துதலாகாது.

*(2)* பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் ஒவ்வொருவரும் சுற்றுலாப்பயணி ஹோட்டல் தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக, (1) ஆம் பந்தியின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அறுபது நாட்களினுள் இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க விண்ணப்பித்து இலங்கைச் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து உரிமம் ஒன்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

**பாகம் I**

சுற்றுலாப்பயணி ஹோட்டல்களைப் பதிவுசெய்தல்

*3. (1)* இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் பதிவுசெய்தலுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும்-

(அ) இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு பொருளளவில் அந்நோக்கத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய வளவுகளில் சுற்றுலாப்பயணி ஹோட்டல் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு விரும்புகின்ற ஆளினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் கட்டளையொன்றின் நியதிகளின்படி செலுத்தப்படற்பாலனவாக இருக்கின்றதான அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

*(2)* பணிப்பாளர் தலைமையதிபதியானவர், விண்ணப்பத்தின்மீது தீர்மானத்தை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக அவர் அவசியமெனக் கருதக்கூடியதான ஏதேனும் தெளிவுபடுத்தல் உள்ளடங்கலாகக் கொடுக்கப்படுவதற்கு மேலதிகத் தகவல் அல்லது ஆவணங்களைத் தேவைப்படுத்தலாம்.

4. பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சுற்றுலாப்பயணத்துறை (சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் குறைந்தபட்சக் கொள்ளளவும் வசதிகளும்) விதிகளில் குறித்துரைக்கப்பட்ட எல்லா சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் வகுதிகளுக்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகளுடன் அத்தகைய சுற்றுலாப்பயணி ஹோட்டல் இணங்கியொழுகுகின்றதா என ஆய்ந்தறிவதற்காக, எந்த சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றிற்கு இயைபான விண்ணப்பம் ஏற்புடையதாகின்றதோ அந்த சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாகப் பதிவுசெய்யப்படுவதற்கு முன்னப்பட்ட வளவுகள் முன்னறிவித்தலுடனோ அல்லது முன்னறிவித்தலின்றியோ அலுவலக நேரங்களின்போது உள்நுழையலாம்.

5. (1) விண்ணப்பமொன்றைப் பெற்றுக்கொண்டதன் மீதும் விண்ணப்பதாரி மேற்சொல்லப்பட்ட தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளார் எனத் திருப்திப்படுவதன்மீதும், பணிப்பாளர் தலைமையதிபதியானவர்–

(அ) சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாக வளவுகளையும் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் ஒருவராக விண்ணப்பதாரியையும் பதிவுசெய்யலாம் ; அத்துடன்

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கியுள்ள, அந்த நோக்கத்திற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டியவாறான அத்தகைய படிவத்தில் பதிவுச்சான்றிதழ் ஒன்றை விண்ணப்பதாரிக்கு வழங்கலாம்.

(2) பொய்யான, தவறாக இட்டுச்செல்கின்ற அல்லது சரியற்ற தகவலை அல்லது விபரங்களைக் கொண்டுள்ளதெனக் கண்டுபிடிக்கப்பட்ட விண்ணப்பமொன்று நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

(3) பதிவுச்சான்றிதழ் ஒன்றின் வழங்குகைக்கான விண்ணப்பமொன்று மறுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய மறுப்பிற்கான காரணங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். அத்தகைய மறுப்பிற்கான காரணங்களை விண்ணப்பத்தில் காணப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்கின்ற ஆளுக்கு அறிவித்தல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (3) ஆம் பந்தியின்கீழ், தீர்மானமொன்றைச் செய்வதற்கு முன்னர், பணிப்பாளர் தலைமையதிபதி ஒன்றில் தானாகவோ அல்லது தனது சார்பில் எழுத்தில் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரினால் விசாரிக்கப்படும் சந்தர்ப்பமொன்றை விண்ணப்பதாரிக்கு வழங்குதல் வேண்டும்.

6. (1) பணிப்பாளர் தலைமையதிபதி "சுற்றுலாப்பயணி ஹோட்டல்கள் பதிவேடு" என அழைக்கப்படும் பதிவேடு ஒன்றைத் திறந்து பேணுதல் வேண்டும். அதில் அவரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களை உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய படிவத்தில் பேணப்படுதலும் வேண்டும். அதில் சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் மற்றும் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்களின் பதிவு தொடர்பான விபரங்களும் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின்கீழ் பதிவேட்டில் செய்யப்பட்ட ஒவ்வொரு பதிவும் 'பதிவுப் பதிவீடு' ஒன்றாகக் குறிப்பீடு செய்யப்படலாம்.

7. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, தனது சொந்த விருப்பப்படி அல்லது பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப் பயணி ஹோட்டல் ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரினால் அதன் பொருட்டு அவருக்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகள்மீதும், தம்பக்க வழக்கை விசாரிப்பதற்கான சந்தர்ப்பமொன்றை அத்தகைய பதிவுசெய்யப்பட்ட உரிமையாளருக்கு வழங்கிய பின்னரும் பதிவுச்சான்றிதழுடன் இணைத்துள்ள ஏதேனும் நியதி அல்லது நிபந்தனைகளைத் திருத்தலாம், மாற்றலாம், திரிபுபடுத்தலாம் அல்லது இரத்துச்செய்யலாம் அல்லது அதற்கான புதிய நியதி அல்லது நிபந்தனையை உள்ளடக்கலாம்.

(2) ஏதேனும் பதிவுப் பதிவீட்டில் உள்ள விபரங்கள் மேலே (1) ஆம் பந்தியின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் திருத்தப்படுகின்றவிடத்து அல்லது மீளாய்வு செய்யப்படுகின்றவிடத்து, அவர் எழுத்திலான அறிவித்தல் மூலம் பதிவுச்சான்றிதழில் அவசியமான திருத்தங்களைச் செய்வதற்கு அவரை இயலச்செய்வதற்கு அச்சான்றிழைத் திருப்பி அனுப்பும்படி பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரைத் தேவைப்படுத்தலாம். அதனில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுதல் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரின் கடமையாதல் வேண்டும்.

8. (1) ஐந்தாம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழ் ஒன்று-

(அ) பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் அல்லது 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சுற்றுலாப்பயண அபிவிருத்திச் சட்டத்தின் அல்லது அச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் ஏற்பாடுகளின்கீழ் தவறொன்றினைப் புரிந்துள்ளமைக்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவிடத்து ;

(ஆ) பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர், 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் அல்லது 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சுற்றுலாப்பயண அபிவிருத்திச் சட்டத்தின் அல்லது அச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் ஏதேனும் ஏற்பாடுகளை மீறியுள்ளவிடத்தும் அத்தகைய மீறுகையின் கடுமை பதிவுச்சான்றிதழின் ஒரு இரத்துச்செய்தலை அனுமதிக்காதவிடத்து ; அல்லது

(இ) சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாகப் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வளவுகள் ஒரு சுற்றுலாப்பயணி ஹோட்டல் தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக தவிர வேறு ஏதேனும் நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றவிடத்து,

பணிப்பாளர் தலைமையதிபதியினால் இடைநிறுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) பதிவுச்சான்றிதழ் ஒன்று இவ்வொழுங்குவிதியின்கீழ் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றவிடத்து, பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர், பதிவுச்சான்றிதழின் வழங்குகைக்கு அவரால் செலுத்தப்பட்ட கட்டணத்தின் விகிதாசார மீளளிப்பொன்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளின் முற்போந்த ஏற்பாடுகளில் அடங்கியுள்ள ஏற்பாடு எது எப்படியிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி தனது சொந்த விருப்பத்தின்படி இவ்வொழுங்குவிதிகளின்கீழ் சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றாக அத்தகைய வளவுகளைப் பதிவுசெய்வதற்கு ஏதேனும் வளவுகளின் உரிமையாளரைப் பணிக்கலாம்.

10. ஹோட்டலினுள் துலாம்பரமான இடமொன்றில் வெளிக்காட்டிவைக்கப்படுவதற்கு அத்தகைய ஹோட்டல் தொடர்பில் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழை வைத்திருக்கச் செய்வித்தல் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரின் கடமையாதல் வேண்டும்.

## பாகம் II

### பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல்களுக்கு உரிமமளித்தல்

11. (1) சுற்றுலாப்பயணி ஹோட்டலொன்றுக்கான உரிமம் ஒன்றை வழங்குவது தொடர்பில் இவ்வொழுங்குவிதிகளின் 2 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின்கீழ் உரிமம் ஒன்றிற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும்-

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய நோக்கத்திற்காக வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஆக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு இயைபான உரிமமளிக்கும் கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அவ் ஹோட்டல்களின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, உரிமத்தை வழங்குவதற்காக, குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் விண்ணப்பம் தொடர்பாக அத்தகைய மேலதிக தகவல், ஆவணங்கள் அல்லது தெளிவுபடுத்தல்களைக் கொடுத்துதவுவதற்கு விண்ணப்பதாரியைப் பணிக்கலாம்.

12. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, திருப்திப்படுவதன்மேல், அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் தொடர்பில் உரிமம் ஒன்றை வழங்கலாம்.

(2) மேலே (1) ஆம் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்று-

(அ) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதலை உரிய முறையில் பெறுவதற்கு பணிப்பாளர் தலைமையதிபதி தோதானதெனக் கருதக்கூடியவாறானதும் உரிமத்தில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்படலாம் ;

(ஆ) அதனில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று வலுவிற்கு வருதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அது பணிப்பாளர் தலைமையதிபதியினால் முன்னரே இரத்துச்செய்யப்பட்டிருந்தாலோ அல்லது இல்லாதொழிக்கப்பட்டிருந்தாலோ அன்றி உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொனறுக்கு வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

13. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பதாரி-

(அ) இவ்வொழுங்குவிதிகளின் 2 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வளவுகளை அதில் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப் பயணி ஹோட்டல் வியாபாரத்தைக் கொண்டுநடாத்த நாடுகின்ற ஆண்டையும் முறையே பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப் பயணி ஹோட்டல் ஒன்றாகவும் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளராகவும் தன்னைத்தானே பதிவுசெய்வதற்குத் தவறியுள்ளவிடத்து ;

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நியதி நிபந்தனையுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறியுள்ளவிடத்து ;

(இ) எந்த ஆண்டு தொடர்பில் விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளதோ அவ்வாண்டின் உடன்முற்போந்த ஆண்டு காலத்தின்போது, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் அல்லது 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சுற்றுலாப்பயண அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளில் எதனையும் அல்லது இச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள் அல்லது விதிகளை மீறுவதன் காரணமாக ஏதேனும் தவறிற்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து ; அல்லது

(ஈ) இவ்வொழுங்குவிதியின் 12 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளவிடத்து,

12 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் உரிமம் ஒன்றை வழங்குவதற்கு மறுக்கலாம்.

14. (1) பணிப்பாளர் தலைமையதிபதி-

(அ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் அல்லது 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சுற்றுலாப்பயண அபிவிருத்திச் சட்டத்தின் அல்லது இச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளினது ஏதேனும் ஏற்பாடுகளின் ஏதேனும் மீறுகை காரணமாகப் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் தவறொன்றிற்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து ;

(ஆ) பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நியதிகள் அல்லது நிபந்தனைகளை மீறியுள்ளவிடத்து அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளவிடத்து ; அல்லது

(இ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விலை ஒழுங்குபடுத்தற் கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளவிடத்து,

இவ்வொழுங்குவிதிகளின் 12 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல் ஒன்று தொடர்பில் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றை கட்டளைமூலம் இல்லாதொழிக்கலாம் அல்லது இடைநிறுத்தலாம்.

(2) உரிமம் ஒன்றினை வழங்குவதற்கான விண்ணப்பம் ஒன்று மறுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய மறுப்பிற்கான காரணங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். அத்தகைய மறுப்பிற்கான காரணங்களை விண்ணப்பத்தில் காணப்படும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்படும் எழுத்திலான அறிவித்தல்மூலம், அத்தகைய விண்ணப்பத்தை ஆக்குகின்ற ஆளுக்கு அறிவித்தலானது பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

15. பணிப்பாளர் தலைமையதிபதி, தனது சொந்த விருப்பத்தின்மீது அல்லது உரிமம் ஒன்றை வைத்திருக்கின்ற எவரேனும் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரின் சார்பில் அவருக்குச் செய்யப்பட்ட முறையீட்டின் மீது தம்பக்க வழக்கை விசாரிப்பதற்கான சந்தர்ப்பம் ஒன்றை அத்தகைய பதிவுசெய்யப்பட்ட உரிமையாளருக்கு வழங்கிய பின்னர், உரிமத்துடன் இணைக்கப்பட்ட ஏதேனும் நியதி அல்லது நிபந்தனைகளைத் திருத்தலாம், திரிபுபடுத்தலாம் அால்லது இல்லாதொழிக்கலாம் அல்லது இதற்கான புதிய நியதிகள் அல்லது நிபந்தனைகளை இணைக்கலாம்.

16. பதிவுச்சான்றிதழ் அல்லது உரிமத்தினது பிரதிக்கு விண்ணப்பிக்கின்ற பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் ஒவ்வொருவரும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட விதிப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும்.

## பாகம் III

### பொது

17. பணிப்பாளர் தலைமையதிபதி, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றின் மூலம்–

(அ) பதிவுசெய்யப்பட்டு உரிமம் வழங்கப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் பெயர் ; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின்கீழ் எந்தச் சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் உரிமத்தைப் பதிவுசெய்தல் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதோ அந்த சுற்றுலாப்பயணி ஹோட்டலின் பெயர்களையும்,

வெளியிடுதல் வேண்டும்.

18. (1) ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டலின் பதிவானது 5 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் இல்லாதாக்கப்படுமிடத்து, 12 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் அவ் ஹோட்டல் தொடர்பில் வழங்கப்பட்ட உரிமமானது எல்லா நோக்கங்களுக்குமாக வலுவில் இருப்பதிலிருந்து இல்லாதொழிந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப்பயணி ஹோட்டலின் பதிவு இவ்வொழுங்குவிதிகளின்கீழ் இடைநிறுத்தப்படுகின்றவிடத்து, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அந்த ஹோட்டல் தொடர்பில் வழங்கப்பட்ட உரிமம் அத்தகைய இடைநிறுத்துதற் காலப்பகுதியின்போது வலுவிலிருப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்.

19. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் பதிவொன்று அல்லது இவ்வொழுங்குவிதிகளின்கீழ் உரிமம் ஒன்றை இடைநிறுத்துகின்ற அல்லது இல்லாதாக்குகின்ற கட்டளையொன்றை ஆக்குவதற்கு முன்னர், பணிப்பாளர் தலைமையதிபதி பதிவுசெய்யப்பட்ட உரிமையாளருக்கு வழங்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மீது, நேரடியாகவோ அல்லது அவர் சார்பில் அத்தகைய உரிமையாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி மூலமலாகவோ தம்பக்க வழக்கை விசாரிப்பதற்கான சந்தர்ப்பமொன்றைப் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளருக்கு வழங்கி விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்.

(2) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான வழிமுறைகள், காலப்பகுதி முடிவடைவதன் முன்னர் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரால் எடுக்கப்படாவிடில், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவடைவதன் மேல் இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதல் கட்டளையொன்று ஆக்கப்பட வேண்டுமெனப் பணிப்பாளர் தலைமையதிபதியால் அத்தகைய உல்லாசப் பயணி ஹோட்டலின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளருக்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டிருந்தாலன்றி பதிவு அல்லது உரிமமொன்றை இடைநிறுத்துகின்ற அல்லது இல்லாதாக்குகின்ற கட்டளையெதுவும் ஆக்கப்படலாகாது.

20. பதிவுச்சான்றிதழை வழங்க மறுக்கின்ற அல்லது விடயத்திற்கேற்ப உரிமமொன்றினை வழங்க மறுக்கின்ற அல்லது புதுப்பிக்க மறுக்கின்ற அல்லது வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழொன்றினை அல்லது உரிமத்தினை இடைநிறுத்துதல் அல்லது இல்லாதொழித்தல் தீர்மானமொன்றினால் இடருற்ற எவரேனுமாள், விடயத்திற்கேற்ப மறுத்தலை அல்லது இடைநிறுத்துதலை அல்லது இல்லாதொழித்தலை அத்தகைய ஆள் அறிவிக்கின்ற எழுத்திலான அறிவிப்பைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து முப்பது நாட்களினுள், 1982, யூலை 27 ஆந் திகதிய 296/6 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1982 ஆம் ஆண்டின் மேன்முறையீட்டு நியாய சபைகள் ஒழுங்குவிதிகள்மூலம் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நியாயசபை ஒன்றிற்கு மேன்முறையீடு செய்யலாம்.

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 16)

| பிரதிகளை வழங்கப்படுவதற்கு செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள் | |
|---|---|
| வகுதி | கட்டணம் (ரூபாவில்) |
| பதிவுச்சான்றிதழ் | 5,000 |
| உரிமம் | 5,000 |

5-74/4

---

ச.வ.பீ. 9/2005

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம்**

2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதும், சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 62 ஆம் பிரிவின்கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகார சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி
அதிகார சபை
(இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி
அதிகார சபைக்காகவும் அது சார்பிலும்
கைச்சாத்திடப்பட்டது.)

கொழும்பு,
2016, ஏப்பிறல் 19.

விதிகள்

1. இவ்விதிகள் 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறை (சுற்றுலாப்பயணி ஹோட்டல்களின் குறைந்தபட்ச கொள்ளளவும் வசதிகளும்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2016, மே 20 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஒரு சுற்றுலாப்பயணி ஹோட்டல் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்தகு விரும்புகின்ற ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய சுற்றுலாப்பயணி ஹோட்டலானது இதற்கான அட்டவணையின் நிரல் I இல் உள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றவாறான அத்தகைய சுற்றுலாப்பயணி ஹோட்டலின் இனங்காணப்பட்ட இடப்பரப்பு ஒவ்வொன்று தொடர்பிலும் அத்தகைய அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றவாறான அத்தகை குறைந்தபட்சக் கொள்ளளவு மற்றும் வசதிகளுக்கு இணங்க சாதனமயப்படுத்தப்பட்டுள்ளதென உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**அட்டவணை**

(விதி 2)

*சுற்றுலாப் பயணி ஹோட்டல்களின் எல்லா வகுதிகளுக்குமான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்*

| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| இல. | இனங்காணப்பட்ட இடப்பரப்பு | குறைந்தபட்சக் கொள்ளளவும் விதிகளும் |
| 1. | ஹோட்டல் கட்டிடம் | 1. ஹோட்டலானது குறைந்தபட்சம் இணைக்கப்பட்ட குளியலறைகளுடன்கூடிய 10 படுக்கையறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>2. ஹோட்டலானது தனிவேறான சேவை நுழைவாயிலையும் கொண்டிருத்தல் வேண்டும். |
| 2. | பிரதான சேவைகள் | 1. நல்ல தரமான நீர் போதுமான அளவில் வழங்கப்படுதல் வேண்டும்.<br><br>2. எல்லா விருந்தினர்களின் நோக்கங்களுக்காகவும் மனித நுகர்விற்குப் பயன்படுத்தப்படும் நீர் பருகத்தக்க நீருக்கு இலங்கை அரசாங்க நியமங்கள் ஒத்திசைவானதாதல் வேண்டும்.<br><br>3. கீழ்த்தளம் உட்பட மூன்று மாடிகளுக்குக் கூடுதலாக உள்ள ஹோட்டல் அல்லது கட்டிடம் விருந்தினர்களின் தேவைப்பாடுகளை சமாளிப்பதற்குப் போதுமான விருந்தினர் உயர்த்தியை/உயர்த்திகளைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| 3. | படுக்கையறைகள் | படுக்கை அறையின் அளவு ஆனது (இணைக்கப்பட்ட மாடி முகப்பு மற்றும் மலசலகூடம் நீங்கலாக) பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-<br><br>1. ஐந்து, நான்கு மற்றும் மூன்று நட்சத்திர வகுதிகளுக்கு குறைந்தபட்சம் 22.0 செ. மீற்றர்.<br><br>2. இரண்டு மற்றும் ஒரு நட்சத்திர வகுதிகளுக்கு - குறைந்தபட்சம் 17.0 சதுர மீற்றர்.<br><br>3. அறையின் அகலம் 3.0 மீற்றரைவிடக் குறைவாக இருத்தல் ஆகாது. (இணைக்கப்பட்ட மாடி முகப்பு மற்றும் மலசலகூடம் நீங்கலாக). |
| 4. | கதவுப் பூட்டு | படுக்கை அறையின் பிரதான நுழைவாயில் கதவு ஆனது இழுத்து மூடும்போது தன்னியக்கமாக மூடப்படுதல் வேண்டும். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| இல. | இனங்காணப்பட்ட இடப்பரப்பு | குறைந்தபட்சக் கொள்ளளவும் விதிகளும் |
| 5. | அவசரகால வெளிச்செல்லும் வழி | அவசரகால வெளிச்செல்லும் பாதையைக் குறித்துக்காட்டும் கட்டிடத்தின் வரைபடம் ஒன்று நுழைவாயில் கதவின் உள்மேற்பரப்பின் மீது துலாம்பரமாக வெளிக்காட்டப் படுதல் வேண்டும். |
| 6. | குளியலறைகள் | 1. குளியலறை ஒவ்வொன்றும் குறைந்தபட்சம் 3.7 சதுர மீற்றர் இடப்பரப்பில் இருத்தல் வேண்டும்.<br>2. இயற்கையான அல்லது இயந்திரவியல் ரீதியில் வழிமுறைகள் குளியலறைகளில் இருந்து பயனுறுதியாக பழைய காற்றை அகற்றுவதற்கு இடப்படுதல் வேண்டும். |
| 7. | வீட்டு பராமரிப்பு | 1. ஓடுகின்ற வெந்நீர் மற்றும் குளிர்நீருடன் இடவசதி கொண்ட வீட்டு பராமரிப்பு உணவுக் காப்பறைகளின் போதுமான எண்ணிக்கையானது தடங்கலற்ற மற்றும் வினைத்திறனான விருந்தினர் சேவைக்கு ஏற்பாடு செய்யபட்டிருத்தல் வேண்டும்.<br>2. இவ்வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு இடவசதி மட்டுப் பாடுகளைக் கொண்டிருக்கும் ஹோட்டல்கள் இயைபான பணிகளை நிறைவேற்றுவதற்கு படுக்கையறைகளுக்கு மிகவும் அருகாமையில் மாற்று ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். |
| 8. | சிற்றுண்டிச்சாலையும் மதுபானசாலையும் | வதிவிட விருந்தினர் சிற்றுண்டிச்சாலை வசதி கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும். |
| 9. | உணவுவகைப் பட்டியல் | உணவு வகைப் பட்டியல் A-la carte ஒன்றாக இருத்தல் வேண்டும். |
| 10. | குளிரூட்டல் | போதுமான குளிரூட்டல் வசதிகள் மதுபானசாலையில் கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும். |
| 11. | சமையலறை | 1. காற்றோட்டத்துக்கும் அத்துடன் வெப்பக்காற்று மற்றும் மணம் என்பவற்றை அகற்றுவதற்கும் போதுமான ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும்.<br>2. சவர்க்காரத்தால் கை கழுவுவதற்கு ஒரு தனிவேறாக்கப்பட்ட வசதி மற்றும் பாவித்து எறியக்கூடிய துவாய் அல்லது கையை காயவைப்பதற்கான வெப்பக்காற்று என்பவை சமையலறைக்கான பணியாட்டொகுதி நுழைவாயிலில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br>3. சமையலறை இடப்பரப்பிலிருந்து சிறிது தூரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தனிப்பயன் கொண்ட இடப்பரப்பு ஒன்று, சட்டி, பானைகளைக் கழுவுவதற்கு ஓடும் வெந்நீர், குளிர் நீர் கலந்த குழாயுடன் கூடிய துருப்பிடிக்காத உருக்கு கழிவுத்தொட்டி விரும்பத்தக்க முறையில் இருத்தல் வேண்டும். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | *நிரல் I* | *நிரல் II* |
|---|---|---|
| *இல.* | *இனங்காணப்பட்ட இடப்பரப்பு* | *குறைந்தபட்சக் கொள்ளளவும் விதிகளும்* |
| *12.* | களஞ்சியங்கள் | 1. கடும் குளிரேற்றிகள் மற்றும் குளிர் அறைகள் அனைத்தும் சரியான வெப்பநிலையில் பேணப்படுதல் வேண்டும்.<br>2. பால் உற்பத்திகள் மற்றும் பதனிடப்பட்ட உணவுகள் என்பன இறைச்சி மற்றும் கடல் உணவில் இருந்து தனிவேறாகக் களஞ்சியப்படுத்தப்படுதல் வேண்டும்.<br>3. உணவுக் களஞ்சியங்களானவை வேறு களஞ்சிய இடப்பரப்புகளிலிருந்து பௌதிக ரீதியாக தனிவேறாக்கப் பட்டிருத்தல் வேண்டும்.<br>4. சிதைந்துபோகக்கூடிய பொருட்களானவை வெப்பநிலை கட்டுப்படுத்தும் இடப்பரப்பில் களஞ்சியப்படுத்தப்படல் வேண்டும்.<br>5. பலசரக்குப் பொருட்கள் மற்றும் உலர் உணவுகள் என்பன மணம் மற்றும் சுவையூட்டிகளின் மாசுபடுதலைத் தவிர்த்து களஞ்சியப்படுத்தப்படுதல் வேண்டும்.<br>6. குளிரேற்றி அறைகள் மற்றும் குளிர் அறைகள் ஆகியவற்றின் உள்ளே பயன்படத்தப்படும் எல்லாத் தட்டுகளும் துருப்பிடிக்காத உருக்கு அல்லது பொருத்தமான உலோகம் சாராத மூலப்பொருட்களினால் ஆக்கப்படுதல் வேண்டும்.<br>7. சரியான முறையில் களஞ்சியப்படுத்துவதற்கான வெப்பநிலைகளுடன் மதுசாரங்கள் மற்றும் வைன்களினைக் களஞ்சியப்படுத்துவதற்காக நிலத்தறை ஒன்று அல்லது வசதி என்பன கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும்.<br>8. காகிதாதிகள், எந்திரவியல் பொருட்கள் போன்ற வேறுபட்ட மூலப்பொருட்கள் பௌதீக ரீதியாக தனிவேறாக்கப்பட்ட இடப்பரப்புகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.<br>9. வண்ணப்பூச்சுகள் மற்றும் விரைந்தாவியாகின்ற பதார்த்தங்கள் என்பன கட்டிடத்தின் தனிவேறான நல்ல காற்றோட்டமுள்ள இடப்பரப்பொன்றில் களஞ்சியப் படுத்தப்படுதல் வேண்டும்.<br>10. இரசாயனப் பொருட்களின் களஞ்சியங்கள் தனிவேறாக்கப் பட்டிருத்தல் வேண்டும். |
| *13.* | சுகாதாரத் தேவைப்பாடுகள் | 1. உலர்ந்த குப்பைகூழமானது வெளியகற்றப்படும்வரை மூடப்பட்டு காற்றோட்டமுள்ள வகையில் களஞ்சியப் படுத்தப்படுதல் வேண்டும். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| இல. | இனங்காணப்பட்ட இடப்பரப்பு | குறைந்தபட்சக் கொள்ளளவும் விதிகளும் |
| | | 2. மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடிய குப்பைகூழங்கள் மூலத்தில் வகைப்படுத்தப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டு தனிவேறாக வெளியகற்றப்படுதல் வேண்டும். |
| | | 3. ஈரக் குப்பைகூழம் மூடப்பட்ட இடப்பரப்பொன்றில் தனிவேறாகக் களஞ்சியப்படுத்தப்படுதல் வேண்டும். |
| 14. | காப்பும் பாதுகாப்பும் | 1. ஹோட்டல் கட்டிடம் மற்றும் தீ அணைக்கும் சாதனம் என்பன உள்ளூர் ஒழுங்குவிதிகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.<br><br>2. தீயணைக்கும் சான்றிதழ் ஒன்று தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தீயணைக்கும் அதிகார சபையொன்றிடமிருந்து ஆண்டுதோறும் பெறப்படுதல் வேண்டும்.<br><br>3. குறைந்தபட்சம் பணியாட்டொகுதியின் 75% சதவீத மானோர் தீயணைப்பு முதலுதவியில் பயிற்றப்படுதல் வேண்டும்.<br><br>4. அவசரகால வெளிச்சமிடுகையுடன் சேர்த்து அவசரகால வெளிச்செல்கைக்காக சர்வதேச நியமங்களுக்கு இசைந்தொழுகின்ற அடையாளம் ஹோட்டல்களின் எல்லா இடப்பரப்புகளிலும் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.<br><br>5. பாவனையாளர்களின் பாதுகாப்பிற்காகக் கடலோர ஹோட்டல்களிலும் நீச்சல் தடாகங்களுடனான ஹோட்டல் களிலும் முற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.<br><br>6. வர்வதேச நியமங்களுடன் இசைந்தொழுகும் முற்காப்பு மற்றும் எச்சரிக்கைக் குறிகள் துலாம்பரமாக வெளிக் காட்டப்படுதல் வேண்டும்.<br><br>7. மின்னல் தாக்குவதைத் தடுப்பதற்கான பாதுகாப்பு வழிமுறைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.<br><br>8. முதலுதவி வசதிகள் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.<br><br>9. மருத்துவர்கள், அவசரகால நிலைமைகளில் 24 மணிநேரமும் அழைப்பில் இருத்தல் வேண்டும்.<br><br>10. ஹோட்டலானது பகிரங்கப் பொறுப்பு மற்றும் வேலையாட்கள் நட்டஈடு உள்ளடங்கலாக விரிவான ஹோட்டலாளர்களின் காப்புறுதிக் கொள்கையால் மேவுகை செய்யப்படுதல் வேண்டும். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| இல. | இனங்காணப்பட்ட இடப்பரப்பு | குறைந்தபட்சக் கொள்ளளவும் விதிகளும் |
| 15. | நீச்சல் தடாகங்கள் | 1. ஆழத்திற்கான அடையாளங்கள் மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு அடையாளங்கள் என்பன நீச்சல் தடாகத்தில் நிரந்தரமாக வெளிக்காட்டப்படுதல் வேண்டும்.<br><br>2. நீச்சல் தடாகம் ஒன்று தரமான நீர் கிடைக்கின்றவிடத்து சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைய பேணப்படுதல் வேண்டும்.<br><br>3. நீரின் தரமானது குறைந்தபட்சம் ஒரு நாளுக்கு இரண்டு தடவை பரிசோதிக்கப்பட்டு பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.<br><br>4. நீச்சல் தடாகத்தின் நீரின் தரம் பின்வரும் பராமீற்றருக்குள் பேணப்படுதல் வேண்டும். பிஎச் 7.4 தொடக்கம் 7.6 எஞ்சிய குளோரின் குறைந்தது 0.5 ppm (1.0 ppm விதந்துரைக்கப்படுகின்றது.) |
| 16. | மட்டுப்படுத்தப்பட்ட இயலுமை கொண்ட விருந்தினர்களுக்கான வசதிகள். | 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, அங்கவீனமுற்ற ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் 17 ஆந் திகதி 1267/15 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அங்கவீனமுற்ற ஆட்கள் (அணுகுதல்) தொடர்பான அடிப்பிரதிகளுக்கு இணங்கியொழுகியவை. |
| 17. | பொது மலசலகூடம் | மாற்றுத்திறன் கொண்ட அல்லது சக்கர நாற்காலிப் பாவனையாளர்களுக்கான வசதிகளுடன் குறைந்தபட்சம் ஒரு மலசலகூடமாவது இருத்தல் வேண்டும். |
| 18. | சாரதிகளுக்கான வசதிகள் | சாரதிகளுக்கு இரவு தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்ட வசதிகள் போதுமானதாக இருத்தல் வேண்டும். இங்கு சௌகரியமான படுக்கை வசதியும் தனிவேறான உணவு அருந்தும் பகுதியும் இருத்தல் வேண்டும். |
| 19. | பணியாட்டொகுதி | 1. எல்லாப் பணியாட்டொகுதியினரும் ஆண்டுக்கு ஒரு தடவை மருத்துவ ரீதியாகப் பரீட்சிக்கப்படுதல் வேண்டும்.<br><br>2. அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவத் தொழிலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மருத்துவ அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.<br><br>3. நன்நிலையில் உள்ள நீர் மலசலகூடத்துடனான தனிவேறான சுத்தமான மலசலகூடங்கள் மற்றும் நன்றாகப் பேணப்பட்ட ஷவர் என்பன பணியாட்டொகுதியினருக்கு கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | *நிரல் I* | *நிரல் II* |
|---|---|---|
| *இல.* | *இனங்காணப்பட்ட இடப்பரப்பு* | *குறைந்தபட்சக் கொள்ளளவும் விதிகளும்* |
| | | 4. ஷவர் பகுதிக்குட்பட்ட மலசலகூட சுவர்கள் நீர்த்தடையுடைய பொருட்களால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.<br><br>5. கழிவுத் தொட்டி மற்றும் நீர்மலசலகூடத்தின் ஆகக்குறைந்த உயரம் 150 செ. மீ. ஆக இருத்தல் வேண்டும் என்பதுடன் தூறல் பொழிவுப் பகுதி 210 செ. மீ. ஆக இருத்தல் வேண்டும்.<br><br>6. தூறல் பொழிவு இடப்பரப்பு உட்பட மலசலகூட உட்பக்கத் தளம் சறுக்காத பொருட்களினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும். |

5-74/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.